

# ஆதாரக்கல்வி

## ஆண்டு மலர்



பொய்பேசி, அநியாயம் செய்து சேர்த்த பணத்தினால் பயனேது மில்லை. தன் பொருளைப் பெருக்குவதற்காக ஏழைகளைத் துன்புறுத்துவோன் இறுதியில் துன்புறுவான்.

ஏழையும் பணக்காரனும் சமமானவர்களே. அவர்களிருவரையும் படைத்து, அவர்களுக்கு அறிவொளி அளித்தவனும் ஆண்டவனே.




**ஆதாரக் கல்வி காரியாலயம்,**

நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,

ஆண்டுசந்தா ரூ. 3] சென்னை. [தனிப்பிரதி அணா 4

# பொருளடக்கம்


1. எது உண்மை ... 1
2. சர்வோதயம் ... 3
3. கருத்துப் புரட்சி மூலமே சர்வோதயம் உண்டாக்கப்படவேண்டும் ... 4
4. தன் கையே தனக்குதவி —சி. பாலசுப்ரமணியம்... 5
5. ஒரு ஆரம்ப ஆசிரிய தொண்டர் ... 8
6. கணக்கு —M. S. சீனுவாசன் ... 9
7. ஆசிரியப் பயிற்சிசாலைகளை ஆதாரக்கல்வி பயிற்சிசாலைகளாக மாறுவதை வரவேற்கிறோம்... 11
8. குடியரசு அமைப்பில் ஆரம்ப ஆசிரியர் —T. R. சாமி... 13
9. ஆசிரியரும் அரசியலும் —P. K. சிவப்பிரகாசம் ... 16
10. குடியரசில் ஆசிரியர் சங்கம் —சரபன் ... 18
11. ஆசிரியர் உள்ளம் —சிகி ... 22
12. முதலில்—முதியோர் கல்வி —மு. தியாகராஜன்... 24
13. முதியோர்க் கல்வியும் பேசும் படமும் —K. S. சந்திரசேகரன், M.A., L.T., — 27
14. கல்வி ஸ்தாபனங்களின் சொத்துக்களும் சர்க்காரும் ... 30
15. மூலாதாரக் கல்வியே முனிவரருளிய உபநிஷத உண்மைகள் —ஆசி ... 32
16. மனித விலங்காகவே வாழ்கின்றனரே ! ... 36
17. காம்-மசாலா —கோவர்த்தனம் ... 37
18. அடா! அஷ்டவக்ரமே!!— வித்வான் A. வெங்கடலக்ஷமம்மா ... 38


---


# வெங்கட்ராம அண்டு கோ.,

பிரசுரகர்த்தர்கள் :

## 1-C, ஆண்டர்ஸன் தெரு, சென்னை-1

எங்கள் வசம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான கீழ்க்கண்ட எல்லாவித புத்தகங்களும் கல்வியில் தேர்ந்த போதகர்களால் எழுதப்பட்டும், சென்னை அரசாங்கத்தாரால் பாட புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது. சீசன் காலத்தில் ஆர்டர்கள் தாமதமாகாமலிருக்க, தங்களுக்குத் தேவையானவைகளுக்கு ஆர்டரை முன்கூட்டியே அனுப்பக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

1. புதிய முறைத் தமிழக வாசகம் 1 முதல் 5 வகுப்பு வரை
2. ஆரம்ப கணிதம் 3 முதல் 5 வகுப்பு வரை
3. இயற்கைப் பாடமும், தோட்டவேலையும் 4, 5, வகுப்புகளுக்குரியது
4. இந்துதேச சரித்திரம் 4, 5, வகுப்பு வரை
5. ஷை 6 முதல் 8 வகுப்பு வரை
6. தமிழ் மொழிப் பயிற்சிகள் 3 முதல் 5 வகுப்பு வரை
7. தமிழ் நீதி கதா வாசகம் 3 முதல் 5 வகுப்பு வரை
8. தென்னாட்டுப் பேரரசர் இலக்கிய கதைகள்
9. புதுமலர் பூகோளம் 4, 5, வகுப்பு வரை

# ஆகாரக்கல்வி

ஆசிரியர்: அ. கி. சு. சர்மா

கல்வி 2 | விரோதி, பங்குனி—ஏப்ரல் 1950 | கலை 12


## எது உண்மை.

ஏழை மேன்மேலும் ஏழையாக, பணக்காரனிடம் அதிகப் பணம் வந்து குவிகிறது. ஆனால் எவரும் சுகம் பெறுவதையோ சுகமாக வாழ்வதையோ காணோம்.

மக்கள் இன்பம் பெறுவதற்குப் பணம் ஒன்றையே உபாய மென்று மேல்நாட்டு பொருளாதார சாஸ்திரிகள் கூறுகிறார்கள். பணம் எந்த அளவுக்கு அதிகமாகச் சேர்க்க கூடுமோ அவ்வளவுக்கு நல்லதென்று அவர்கள் போதிக்கிறார்கள். இத்தகைய கருத்துக்கள் பரவியதினால், பணம் சேமித்துக் கொடுப்பதற்காக ஏழைகள் இரவு பகலாக உழைக்கிறார்கள். அவர்களுக்கு எதையேனும் கற்கவோ, நல்ல காரியம் எதையேனும் செய்யவோ சிறிதும் ஓய்வு கிடைப்ப தில்லை. பணக்காரர்களைப் பார்த்து ஏழைகள் தாமும் பணக்காரர் களாக விரும்புகிறார்கள். அவ்வாறு ஆகமுடியாதபொழுது வருத்த மும் ஆத்திரமும் அடைகிறார்கள். பணம் பெறுவதற்கு வீண் முயற்சி செய்கிறார்கள்; இவ்வாறு அவர்களின் பணம், உழைப்பு ஆகிய இரண்டுமே பாழாகின்றன. அதிருப்தி வேரூன்றி கிளைக்கிறது. இறுதியில் பணக்காரன்—ஏழை, எஜமான்—வேலைக்காரன் என்ற இருவருமே தம் வரம்புகளை மீறிவிடுகிறார்கள். பூனைக்கும் எலிக் கும் ஜன்மப் பகையாயிருப்பதுபோல பணக்காரனுக்கும் ஏழைக்கும், எஜமானனுக்கும் வேலைக்காரனுக்கும் பகைதோன்ற, மனிதர்கள் மனிதர்களாக வாழாமல் மிருகங்களைப்போல் நடந்து கொள்ளத் தொடங்குகிறார்கள்.

## வழி என்ன?

பணம் என்பது ஒரு வெறும் உதவிக்கருவியே. அது நல்லவன் கைக்குப் போகுமானால் அதைக்கொண்டு, வியவஸாயம் நடக்க, தானியம் விளையும். வியவசாயிகள் குற்றமில்லாத தொழில் புரிந்து திருப்தியாக வாழவே, நாடு சுகமுறும். ஆகவே, உண்மையான

மனிதனே உண்மைச் செல்வமுமாவான். நீதிமுறை வழங்கும் நாடே செல்வமுள்ள நாடு. நீதி தவருது நடப்பவர்கள் பேராசைக்கு பலியாகமாட்டார்கள். அவர்கள் முதலில் தம் மனத்தை நிலைப்படுத்திக்கொண்டு, தாம் சன்மார்க்கத்திலிருந்து வழுவாது இருந்து கொண்டு, தம் செயலினல் பிறரையும் நல்வழியே திருப்ப முயலுவார்கள் எந்த நாட்டில் இத்தகையவர்களின் தொகை அதிகமாக இருக்குமோ அதை சுயராஜ்யம்பெற்ற நாடென்றே கருதவேண்டும்.

## தலைசிறந்த நீதி

ஏழையில்லாமல் பணக்காரனுலோ, பணக்காரனின்றி ஏழையாலோ எதுவும் செய்யமுடியாது. ஆகையால், எவனும் மற்றவனை உயர்ந்தவனென்றோ தாழ்ந்தவனென்றோ சொல்வதற்கில்லை. ஆனல் இப்பொழுதோ இவ்விருவருமே தம் சரி நிகரான தன்மையை மறந்திருக்கிறார்கள். கடவுள் அளித்த அறிவே நம்மிடம் ஒளி பரப்பிக் கொண்டிருக்கிறது என்பதை இவர்கள் மறந்துபோகும் பொழுது விபரீதமான பயன்கள் விளைகின்றன.

அந்நியநாட்டு பொருளாதார சாஸ்திரம் பணத்தைத் திரட்டுவதற்கே வழி சொல்லிக்கொடுக்கிறது. அ வ ர் க ள் சாஸ்திரம் கொள்ளை முறையில் பொருள் சேர்ப்பதைப் பற்றியேதான் பேசுகிறது. பணத்தின் போக்கைக் கட்டுப் படுத்துவதற்குதவும் விதியை அறவே அவர்கள் மறந்துவிடுகிருர்கள். அவர்களின் சாஸ்திரம் சட்டத்திற்கு ஒத்திருந்தும் நியாயத்திற்கு மாருகவே காண்கிறோம். ஆகையால் சட்டத்தை சாட்சியத்திற்கு அழைக்காமல் நியாயமான முறையில் பணம் சம்பாதிருப்பதே சரி என்று சொல்ல வேண்டும். எது நியாயம், எது நியாயமல்லவென்று உய்த்துணரும் சக்தியை உண்டாக்குவது மனிதனுடைய முதல் வேலை.

ஆண்டவன் மனிதனுக்கு அறிவை அளித்திருக்கிருன்; பகுத்துணரும் சக்தியைத் தந்திருக்கிருன்; நியாயம் அநியாயத்தை உணர போதிக்கிருன்; அதன் மூலமாகப் பிறரைத் தின்று ஏப்பம்விடுவதோ பிறரை ஏமாற்றி, பரதேசிகளாக்கித் தாம் தனவந்தராவதோ தகாது.

நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தும் சாஸ்திர மொன்றே உண்மையான சாஸ்திரம். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நியாயமாக நடப்பதெப்படி, நீதி முறை வழுவாதிருப்பதெப்படி என்கிற சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளும் நாடே சுகம் பெறும்.

காந்தி பொருளாதார சாஸ்திரம் நம் நாட்டிற்கு உகந்தது. காந்திஜியின் பல கருத்துக்கள் அடங்கிய புத்தகங்கள் நாட்டில் பரவ வேண்டும். மக்கள் அவைகளைப் படித்து பயன் பெறுவார்களாக.

# சர்வோதயம்

மகாத்மாக்களின் நினைவு சாதாரண மனிதர்களுக்கு சோர்வையகற்றி, உற்சாக மூட்டும் சக்தி வாய்ந்தது. இம்மாதிரி, எவ்வளவு அதிகமாக பெரியோர்களின் ஞாபகங்களை நாம் சேகரிக்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது.

ஒரு கொள்கையை பின்பற்றுவது ஒரு மஹானை பின்பற்றியதைவிட எளிதாகும். காந்திஜி இந்த கருத்தில் மிகவும் பற்றுள்ளவர். ஜனங்கள் அவரது பிறந்த தினத்தை காந்தி ஜயந்தியென அழைக்க முயன்றார்கள். ஆனால், அவர் அந்த நாளை சர்க்கா ஜயந்தியென அழைக்கச் சொன்னார். அப்படி செய்வதினால் ஒரு தனி மனிதன் ஞாபகத்தைக் காட்டிலும், ஒரு கொள்கையின் ஸ்தூலமான தோற்றத்தையே நிரந்தரமாக்கக்கூடும். இந்த தத்துவத்தை யொட்டியே, நாம் மகாத்மாவை இறந்த தினமாகிய ஜனவரி 30-ந் தேதியையும், அவரது அஸ்தியை கரைத்த தினமாகிய பிப்பிரவரி 12-ந் தேதியையும், இந்த இரண்டு தினங்களுக்கும் இடையிலேயுள்ள நாட்களையும், முறையே சர்வோதய தினங்களென்றும், சர்வோதய வாரமென்றும் அழைக்கிறோம்.

சத்யம், அஹிம்ஸை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டதாய், எவரும் எவரையும் எமாற்றவே இடமில்லாததாய், சமுதாயமும், தனி நபரும் பூர்ணமாக முன்னேறுவதற்கு வசதியளிப்பதாயுள்ள ஒரு சமூகத்தை அமைத்தலே சர்வோதயம்.

சாதனம். கீழ்க்கண்ட உபாயங்கள் அனுசரிக்கப்படவேண்டும்.

1. மத ஐக்கியம் (பல்வேறு மதத்தைச் சேர்ந்தவரிடையே ஒற்றுமையை உண்டாக்குதல்); 2. தீண்டாமை ஒழிப்பு, 3. ஜாதி வேற்றுமைகளை அகற்றல், 4. கள்குடி ஒழிப்பு, 5. கதரும் கிராமக் கைத்தொழில்களும், 6. கிராம சுகாதாரம் 7. ஆதாரக் கல்வி, 8. பெண்களுக்கு ஆண்களைப்போன்ற சம உரிமை, சமூகத்தில் சம அந்தஸ்து. 9. ஆரோக்கியமும், சுத்தமும், 10. நாட்டுப் பாஷைகளின் வளர்ச்சி, 11. குறுகிய மாகாண நோக்கை அகற்றல், 12. ஹிந்துஸ்தானியை தேசீய பாஷையாக்க முயற்சித்தல், 13. பொருளாதார சமத்துவம், 14. விவசாய முன்னேற்றம், 15. தொழிலாளர் கட்டுப்பாடு, 16. ஆதிவாசிகளுக்கு ஊழியம், 17. மாணவர் கட்டுப்பாடு, 18. குஷ்டரோகிகளுக்கு ஊழியம், 19. அகதிகளுக்கு உதவி, 20. பசுப் பாதுகாப்பு, 21. இயற்கை வைத்தியம்.

மேலே கண்ட கொள்கைகளையும், சாதனங்களையும், புத்தி பூர்வமாக எற்று, உறுதியுடன் உழைக்கவேண்டும். தம் லக்ஷியத்தை எய்துவருக்கு தூய சாதனங்களையே நிர்மாண வேலைகள் செய்வோர் கையாள வேண்டும். சாதனங்களின் தன்மை முடிவை பாதிக்கத்தான் செய்யும். ஆகவே, நல்ல லக்ஷியத்தை அடைவதற்கு நல்ல உபாயங்களையே அனுசரிக்கவேண்டும்.

நிர்மாண வேலைகள் செய்யும் சங்கங்கள் இதுவரையில் தனித்தனியாக வேலைகளைச் செய்துவருகின்றன. இந்த நிர்மாண ஸ்தாபனங்களை எல்லாம் பரஸ்பர உதவியுடன் சம்பூர்ண கிராம சேவைக்காக உழைக்கும்படி, அவைகளைத் திருத்தி யமைக்கும்படி காந்திஜி 1944ல் தன் விருப்பத்தை வெளியிட்டார். சமக்ர சேவா சங்கம் என்பதை ஸ்தாபித்தார். சர்க்



(7-ம் பக்கம் பார்க்க)

## கருத்துப்புரட்சி மூலமே சர்வோதயம் உண்டாக்கப்படவேண்டும்.

இன்றைய உலகமே எரிமலைக்கு சமமாயிருக்கின்றது. எப்பொழுது வேண்டுமானாலும் இது வெடித்து நாசத்தை உண்டாக்கிவிடும். சென்ற உலக யுத்தத்தின் பயங்கர விளைவுகள் இன்னும் மறைந்தபாடில்லை உணவு உடையில் பற்றுக்குறை, பணப் பெருக்கம் கள்ள மார்க்கெட் ஆகியவைகள் எல்லாம் யுத்தத்தின் அருமையான குழந்தைகள். இக்குழந்தைகளை மனிதன் சுயநலமென்னும் தொட்டிலில் தாலாட்டுகிறான், ஆதிக்கப் பேராசையின் மூலம் வளர்க்கிறான். இதன் விளைவுகள் இன்னொரு மகாயுத்தமா?

ஏழை பணக்காரன் அற்ற, சுரண்டுபவன் சுரண்டப்படுபவன் அற்ற, ஜாதியில் மேல் கீழ் அற்ற, ஓர் சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதே சர்வோதயம். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதும், அதற்கொப்பக் காரியங்கள் செய்வதுமே சர்வோதயம். கடையனுக்கும் கடைத்தேற்றமளிக்க ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சர்வோதய இயக்கத்தின் நோக்கம் வையகம் முழுவதும் வாழ வழி கோலுவதுதான்.

இன்றைய உலக அமைப்பில் சிலருக்கு ஏற்படும் நன்மைகள் பலருக்குத் தீமையாக இருக்கின்றன. குவியல் முறை உற்பத்தியே இதற்குக் காரணம். மனிதன் பரவல் முறையில் உழைப்பின் மூலம் தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும்போதுதான் எல்லோரும் இன்புற்றிருக்க இயலும். சிறு குடிசைத் தொழில்களை பரவல் முறையில் அபிவிருத்தி செய்தலே சர்வோயத லட்சியத்தின் அடிப்படையில் செய்யும் தொண்டாகும். இதுவே, காந்தியடிகள் கையாண்ட தத்துவம். இத்தத்துவத்தையே நிர்மாண ஊழியர்களுக்கு அவர் உபதேசித்துவந்தார். ஏனைய காங்கிரஸ் காரர்களும் இத்தத்துவத்தை உணர்ந்து, அறிந்து, கையாண்டு, பிறருக்கும், பிரசாரம் செய்துவந்தனர். ஆனால் அரசியல் சுதந்திரம் பெற்றபிறகு-ஏன் மகாத்மா மறைவுக்குப் பிறகு-காங்கிரஸ் காரர்களின் உழைப்பு இத்துறையிலே, மிக மிக குறை ஏற்பட்டுள்ளதைக் காண வருத்தப்படாமலிருக்க முடியாது.

நாட்டில் ஜீவ நாடியாகக் கருதப்படும் விவசாயக் குடும்பங்களிலே சோம்பலைப்போக்க முயலும் சர்க்காவின் மூலம் கிராம மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். காந்திஜியளித்துள்ள நிர்மாணத்திட்டத்தைப் பரவச்செய்யவேண்டும். சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கெதிரே போராடும் பெரிய பொறுப்புடனும், தன்னம்பிக்கையுடனும், இடைவிடாத முயற்சியுடனும், நாணயம் நிறைந்த ஓயாத உழைப்புடனும் தொண்டாற்றினால்தான் கடையனுக்கும் கடைத்தேற்றமளிக்க இயலும்.

பொதுநல ஊழியர்கள் விழித்தெழுந்து, அஹிம்சை, சத்தியம் என்ற இருசுடர் விழிகளுடன் நாட்டின் நலத்திற்காக உழைக்க ஈசன் அருள்புரிவாராக

# தன் கையே தனக்குதவி

(சி. பாலசுப்பிரமணியம்—செயலாளர், பென்னலூர்)

மக்கள் ஒருவர்க்கொருவர் பிறர் உதவியை நாடியே வாழ வேண்டியவர்கள். சமுதாயம் சீரும் சிறப்புமாக விருக்க தனக்கென வாழா பிறர்க்குரியனுகவும் மக்கள் தொண்டே தெய்வத் தொண்டென மதித்து அனைவரும் நடத்தல் வேண்டும். யாதொரு காரியத்திற்கும் பிறர் உதவியையே எதிர்பார்த்தல் கெட்ட பழக்கத்திற்கு வித்து ஊன்றுவதாகும். அவரவர் வேலையை அவரவர் செய்வது சாலவும் நன்று. தன் முயற்சியால் நன்மைப் பெற்று வாழவும், பிறரை எதிர்பார்த்த லென்பது பயனற்றது என்ற மனேநிலையும் ஒவ்வொருவரிடமும் வளர வேண்டும்.

இந்தநேர புதுமை அடுத்த விநாடியில் பழைமையாகிறது. அப்போதைக் கப்போது உருவாகிவரும் புது திட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலியவற்றில் மோகம் கொண்டு, காலதேச வர்த்தமானத்துக்குத் தகுந்தாற் போல் புதிய மாறுதல்களை எளிதில் உணர்ந்து அவைகளுக்கனுசரணையாக காரியங்களை நடத்தும் நவயுக ஆசிரியராக திகழ வேண்டும். பொது மக்களில் கல்வி இல்லாதாரும் ஆசிரியர் உழைப்பினைப் போற்றக்கூடிய வகையில் அனைவரும் நடத்தவே சமூகத்திற்கு நற்பெயர் தேடித் தருவதாகும்.

உழைப்புக்கேற்ற ஊதியமோ, சேவைக்கேற்ற சௌகரியமோ, ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை மேல் சட்டசபையில்கூட பட்ஜட் விவாதத்தின்போது டாக்டர் வி. கே. ஜான் முதலிய அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். மந்திரியாரோ சம்பளத்தில் ஒரு ரூபாய் உயர்த்தினுலும் 10 லட்சம் ரூபாய் அதிகம் தேவை என்கிறார். இவர் சித்தாந்தப்படி எண்ணிக்கையில் அதிகமிருக்கக் கூடாது போலும். இந்த நிலையில் பள்ளியே இல்லாத 3500, கிராமங்களுக்கு பள்ளிக்கூடம் வேண்டும். பள்ளிக்குப்போகும் மாணவர்கள் நீங்கலாக பாக்கியுள்ள 37 லட்சம் மாணவர்களுக்கும் மற்றும் வயது வந்தோருக்கும் எழுத்தறிவிப்பது எங்ஙனம்?

வாழ்க்கைக்கு வசதி செய்யாவிட்டாலும் தொழிலில் கௌரவம் உண்டா? பம்பாய் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுகிருர்கள் ஏன்? அவர்களது முயற்சியும் கனம், பி. ஜி. கெர் அவர்களின் நல்லெண்ணமுமேயாகும்.

இன்று நமது நிலை என்ன? ஏன்? எப்படி? போன்ற புரட்சிகரமான கேள்விகளைக்கேட்டு ஆராய்ந்து தெரிந்துக் கொள்ளக் கூடிய பாடதிட்டங்கள் போதிக்கின்றோம். ஆனல் நாம் மட்டும் பிறர் சொல்வதெல்லாம் வேதவாக்காகவும், அவர்கள் செய்கை எல்லாம் அனைவரும் ஒப்ப வேண்டுமென்று சட்டத்தைக் காட்டி மிரட்டுகின்றனர். எடுத்த

தெற்கெல்லாம் சட்டமா? பேச்சுகளெல்லாம் அதிகார தோரணையிலேயா? அரசியல் நிர்ணய சபையாவது ஆரம்பாசாரியர்களை அலட்சியமாக ஒதுக்கிடாமல் பிறப்புரிமையையாவது கொடுத்ததா? இந்த மனப்பான்மை மாய பணம் தேவை இல்லையே. இதற்குயாது செய்வது? எவர் உதவ வல்லவர் என்று ஏங்குவானேன்? தன் மானம் காக்க அவரவர் முயற்சியே உற்ற துணையாகுமல்லவா?

கடமையை வழுவாது ஆற்றிக்கொண்டு உரிமைக்கு மேலிடத்தாரிடம் பகிரதப் பிரயத்தனஞ் செய்கின்றோம். தெரிவிக்கின்றோம். நமது நியாயமான கோரிக்கைகளை, பணமில்லையே என்று பதில் வருகிறது. புள்ளி விவரங்களுடன் வாதமிடுகின்றோம். 'முடியாது' என்று உத்தரவும் பிறந்து விடுகிறது அது மட்டுமா? மாநாடுகளிலும் மாலை போட்டு வயிற்றை பெல்டால் இறுகக்கட்டி ஓரளவாவது உழையுங்கள் என்ற உபதேசத்தையேக் கேட்டுக் கொள்ளுகின்றோம். இந்த ஓரளவு என்ற சொல்லின் பொருளை உன்னிப்பாருங்கள்.

அனைத்திலும் மேம்பட்டவர் ஆசிரியர்என்று மேடைக்குலுங்க பேசிவிட்டு, நடத்துங்கால் அற்ப நாய்க்குக் கொடுக்கும் ஒரு சிறப்பையும்கூட ஆசிரியர்களுக்குக் கொடுக்க மறுக்கின்றனர் ஒரு சிலர். அவர்தம் செயல்கண்டு வெட்கித் தலைகுனிவதா? சினமூண்டு போரிடுவதா? உத்தியோகத்தைக் காட்டிலும் பொதுஜன சேவையையே உண்மையானத் தொண்டர்கள் விரும்புவார்கள். அதற்குரிய நாளும் வந்திடாதா? அடக்குமுறை ஒழிந்தபாடில்லை. அன்னியன் விட்டுப்போன அசம்பாவிதங்கள் மலிந்து கிடக்கின்றன. எங்கும் அதிருப்தி நல்லுணர்ச்சியும் மாறுபடுகிறது. உணர்ச்சியின் பலன் நல்வழியில் பயன்பட எதேச்சாதிகாரத்தை விட்டு, மயக்குகின்ற சொற்களை ஒழித்து, கோபதாப உணர்ச்சிகள், பழிவாங்கல், கற்பனை செய்துக்கொண்டு சொற்போர் செய்தல் முதலிய துர்க்குணங்கள் மாய்த்து சரிசமத்துவமாக நடந்துக்கொள்ளும் நாள் சேய்மையில் இல்லை.

ஆசிரியர்களில் சிலர் எதற்கெடுத்தாலும் பிறரையே நாடி இலவ மரத்துக் கிளிபோலாகின்றனர். நம்மிடையே கட்டுப்பாட்டை விருத்தி செய்துக் கொண்டு சுயநோக்க முயற்சியினாலே முன்னேற பல வழிகள் உள்ளனவே. அவைகளை எல்லாம் எண்ணுமா உள்ளம். உதாரணமாக அகாலமரணம் வயோதிகபருவம் அடைந்த குடும்பங்களுக்கு உதவி செய்தல், யூனியன் சார்பில் நூற்புப் பயிற்சி முதலுதவிப் பயிற்சி, திருக்குறள் வகுப்பு, நூல் எழுதுதல், பத்திரிகை நடத்துதல் போன்ற பல திட்டங்களை ஏற்று நடத்துவது ஆசிரியர்களின் மேம்பாட்டிற்குறியன. ஆசிரியர்கள் அவர்களாகவே அவர்களுக்கு வேண்டியதைச் சிந்தித்தும், கனடாவிலுள்ள ஆல்பர்டா ஆசிரியர் சங்கம், பிரிடிஷ் கொலம்பியா ஆசிரியர் சமஷ்டியின் அங்கத்தினர் முதலியோர் பென்ஷன்போதாத ஆசிரியர்களுக்கு பொருள் உதவ

முன் வந்திருக்கிறதையும், ஆஸ்திரேலியாவிலுள்ள ஆசிரிய சங்கங்கள் 'ஆசிரியர் சாஸனம்' ஒன்று தயாரிக்கும்படி அந்நாட்டு அரசாங்கத்திற்கு யோசனை கூறியும் அனுப்பியும் வருவதுமான பிறவெளி உலக அனுபவத்தைக் கொண்டும் நம் முன்னேற்ற பாதைக்குத் திரும்ப முற்பட வேண்டும். அதுவே இன்றைய ஆசிரியர்கள் செய்ய வேண்டிய கடமையும் கடனுமாகும்.

இவைகள் வெற்றியடைய சலிப்பின்றி உழைத்தல் வேண்டும். இடையூறுகள் எற்படினும் உண்மை உழைப்பு எதிரியைத் திருத்து மென்பது சரித்திரச் சான்று. பிறரை நம்பி வாளாஇராமல் ஆசிரியர் பால் அனுதாபங்கொண்ட கழக உறுப்பினர்கள், தலைவர்கள் முதலியோரை அணுகி ஆசிரிய நலனுக்குகந்த நற்காரியங்களைச் செய்துத் தருமாறு தூண்ட வேண்டும் நமது ஆசிரியர்கள். அதுவே சமூகத்திற்கு உழைக்கும் சேவை. இரத்தக் குழாய்களிலே ஒரு புது வலிமையை மூட்டும் புதியதொரு மின்சாரத் தீயாக இஃதிருப்பதாகுக. நமது சொந்த விதியைப் படைத்தவர் நாமே. நமக்கு வேண்டிய முழு பலம் முழுத் துணை நமக்குள்ளே இருப்பதாக கூறுகிறார் விவேகானந்தர். ஆகையால் வருங்கால வாழ்க்கையை இஷ்டப்படி அமைத்துக் கொள்ள நம்மை நாமே தயார் செய்துக் கொள்ள முற்படுவோமாக. நமது குறிக்கோள் வெற்றி பெற்று விளங்க நம் சக்தியையே நம்பி, உழைப்பிற்கேற்ற பலன் உண்டு எனபதை நிலை குன்றமர் விளக்கெனக் காட்டுவோமாக.

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கா சங்கம், கிராம கைத்தொழிற் சங்கம், ஆதாரக் கல்விச் சங்கம், ஹரிஜன ஊழியர் சங்கம், கோசேவா சங்கம் முதலிய ஐந்து சங்கங்களின் பிரதிநிதிகளை அந்த சமக்ர சேவா சங்கத்தில் சேர்த்தார். ஆனல் இந்தப் புதிய ஸ்தாபனம் சில காலம் வேலை செய்ததே தவிற, இதன் நோக்கம் திருப்திகரமாக நிறைவேறவில்லை. இதற்காகவே, 1948ல் பிப்ரவரியில் அகில இந்திய நிர்மாண ஊழியர்கள் மகாநாட்டை சேவா கிராமத்தில் கூட்ட பல எற்பாட்டுகள் செய்யப்பட்டு வந்தன. ஆனல் இதற்குள், மாகாத்மாவை நாம் ஜனவரியில் இழக்க நேரிட்டது. அந்த மகாநாடு 1948-மார்ச்சு மாதத்தில் சேவா கிராமத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையின் கீழ் கூடிற்று. மகாத்மாவின் ஞாபகார்த்தமாகவும், தேசத்தில் சாந்தியை எற்படுத்துவதற்கும், காந்திஜியின் தத்துவங்களையும், லட்சியங்களையும் கொண்ட சர்வோதய ஸமாஜத்தை அந்த மகாநாடு ஸ்தாபித்தது. மேலும் அந்த மகாநாடு, சாவகாசமாக யோசித்து, நிர்மாண ஸ்தாபனங்களை இணைப்பதைப் பற்றிய விஷயமாய் ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஆகையினல் டாக்டர் குமரப்பா அவர்கள் ஆலோசித்து எல்லா நிர்மாண ஸ்தாபனங்களுடன் கலந்து ஒரு திட்டத்தை கொடுக்க அந்த மாகாநாடு அவருக்கு அதிகாரம் அளித்தது. பின்னர் பூனவில், நிர்மாண ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கூடினர். அகில இந்திய சர்வ சேவா சங்கம் என்பதை உருவாக்கினர். எல்லா நிர்மாண வேலைகளையும், சமக்ர திருஷ்டியுடன் ஒரு உதாரண முறையில் சம்பூர்ண கிராம சேவைக்காக வேலை செய்ய, இந்த சங்கம் வழிகாட்டும். அத்துடன் சர்வோதய லக்ஷயத்தின் கருத்துக்களை மக்களிடம் பரப்பும்.



சி. பாலசுப்பிரமணியம்

மக்கள் பணியே தெய்வப் பணியாகக் கொண்டு தொண்டாற்றும் நண்பர் இவர்.

1930-ல் செங்கற்பட்டு நாட்டாண்மைக் கழகத்தில் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டார். பிறகு குன்றத்தூர் சென்டறுக்குப் பல ஆண்டுகள் செயலாளராக விருந்திருக்கிறார் G. O. 416 அமுலுக்கு வந்ததும். ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா யூனியனை ஏற்படுத்தினார். பிறகு 25-4-41ல் செங்கற்பட்டு மாவட்டக்கழக மாநாடு ஒன்று முதன் முதலாகத் துவக்கினார். ஒவ்வொரு தாலூகாவிலும் யூனியன்கள் ஏற்பட அரும்பாடுபட்டார். செங்கற்பட்டு ஜில்லா ஆசிரியர்களுக்கு சம்பளவெட்டு ஊழியம் முதலியவற்றில் இருந்த அநீதிகளை அரசியலாரிடம் தெரிவித்து, ஆவன செய்ய திரு. P. T. ஜெகந்நாத அய்யங்கார் தலைமையில் ஒரு ஜில்லாக்குழு அமைத்து, இவர் காரியதரிசியாக விருந்து ஆசிரியர்களுக்கு பல நன்மைகள்செய்துள்ளார். ஆண்டுதோறும் ஜில்லாக் கூட்டங்கள் நடத்தி ஆசிரியர்களுடைய நலனை அரசாங்கத்தாருக்கு அறிவித்திருக்கிறார்.

1947-ம் ஆண்டு மார்ச்சு மீ 1, 2 தேதிகளில் திருவாளர்கள் A. K. S. சர்மா ஆதாரக் கல்வி பத்திராதிபர், P. வீரராகவன் போங்தூர், சைதாப்பேட்டை, ராதாகிருஷ்ணன் ஸ்ரீனிவாசப் பிள்ளை, பழனி S. வில்லியபராஜ் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள பல ஆசிரியர்கள் தொடர்புகொண்டு சென்னையில் மாகாண மாநாடு ஒன்று நடத்தினார் அதன் பலனாக ஆசிரியர்களுடைய வாழ்க்கைத்தரம் சற்று உயர்ந்தது.

பிறகு தமிழ்நாடு ஆ. ஆசிரியர் சம்மேளனத்திற்குத் தலைவரானார்.

தற்சமயம் செங்கற்பட்டு ஜில்லாவிற்குத் தொண்டு செய்கிறார். எல்லா ஆசிரியர்களையும் ஆதாரக் கல்வி மூலம் காந்தீயத்தை உணர்ந்து சமூக மேம்பாட்டிற்கு உழைப்பவர்களாகவும் இருக்க விரும்புகிறார்.

---

குறிப்பு:—ஆசிரிய சமூக முன்னேற்றத்திற்காக ஆங்காங்கு தொண்டாற்றிவரும் ஆசிரிய நண்பர்களை ஆசிரிய உலகத்திற்கு அறிமுகப்படுத்தவே, அன்னாரின் உருவப்படமும், வாழ்க்கைக் குறிப்பும் அவ்வப்பொழுது பிரசுரிக்கப்படும்.

# கணக்கு

M. S. சீனுவாசன்

குழந்தைகள் அதிகம், குறைவு, சமம் இவைகளை வாழ்க்கையிலும் வகுப்பு நடைமுறைப் பிரயோகத்தாலும் அறிந்துகொண்டபிறகு எண் வரிசையை போதிக்கவேண்டும். தன் சுற்றுப்புறத்திலுள்ள வஸ்துக்களை எண்ணில் பயிற்சி தரவேண்டும்.

### எண் அறிவுக்கு வேண்டிய உபகரணம்.

மணிச்சட்டம், கொட்டைகள், குச்சுகள், பலவர்ணமுள்ள மணிகள் இவற்றுடன் தனித்தனியே ஒன்று முதல் 10 அங்குலமுள்ள நீளமும் ஒரு அங்குல கன சதுரமுள்ள கட்டைகள் தேவை. இக்கட்டைகளை மாற்றி மாற்றி ஒவ்வொரு அங்குலத்தையும் இரண்டு வர்ணங்களால் தீட்டிக்கொள்ளவும். இக்கட்டைகளின் உச்சியின் மேல்புறம் அதன் நீளத்தை எண்ணால் மட்டும் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

### எண் முறை போதனை.

இக்கட்டைகளை ஒன்றாக சேர்த்துவைத்துப் பார்த்தால் (கீழ்படத்தில் உள்ளதுபோல்)

10<br>
✻9<br>
✻✻8<br>
✻✻✻7<br>
✻✻✻✻6<br>
✻✻✻✻✻5<br>
✻✻✻✻✻✻4<br>
✻✻✻✻✻✻✻3<br>
✻✻✻✻✻✻✻✻2<br>
✻✻✻✻✻✻✻✻✻1<br>
✻✻✻✻✻✻✻✻✻✻

ஒரு மாடி படிபோன்று அமையும். இப்படிப்பட்ட கட்டைத் தொகுப்புகளை பிள்ளைகள் படிபோன்று அடுக்குவதில் பழகவேண்டும். குழந்தைகள் சரியாக அடுக்கின பிறகு அடியிலுள்ள சிறிய கட்டையை எடுத்து அடுத்ததின்மேல் வைக்க அது மூன்றுவதுக்கு சமமாகும். அதனையே மூன்றுவதின் மீது வைக்க நான்காவதற்கு சமம் ஆகும். இப்படியே அதனை ஒவ்வொன்றின் மீதும் வைத்து அதற்கு அடுத்த பெரியதின் சமம் ஆவதா கவனிக்கச் செய்ய வேண்டும். மிகச் சிறியதுடன் அதுபோல் மிகச் சிறிது ஒன்று சேர்க்க அடுத்த பெரியதற்கு சமம் ஆயிற்று என்பதை கவனிக்கும்போது அதிலே உள்ள இரண்டு வர்ணம் தீட்டிய பாகங்களை கவனிக்கச்செய்து, சிறியவை தனித்தனியே இரண்டு இருப்பதை கவனிக்கச் செய்ய வேண்டும். சிறியதை ஒன்று என்று சொல்லி மற்றொரு சிறியதைக்காட்டி அதனையும் அவ்வாறே கூறிச் சேர்த்துவை (ஒன்றும் ஒன்றும் என்று சொல்லிச் சேர்) அவை இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்துப்பிடித்து இரண்டு என்று சொல்லி பிள்ளைகளைச் சொல்லச்செய். பிள்ளைகளையும் அவ்வாறே செய்துப் பழக்கல் நன்று(1ம்1ம்=2)இரண்டிலிருந்து ஒன்றை எடுத்து ஒன்றுவதைக் கவனிக்கச்செய் இரண்டில் ஒன்று எடுக்க ஒன்றாகும் என்று சொல்லிப் பழக்கவேண்டும்.

இரண்டு மிகச் சிறிய கட்டை கட்டுச் சமமாக அடுத்த பெரிய தைக்காட்டி அதனையும் பிள்ளை கள் இரண்டு என்று சொல்லும் வரை மேற் கூறியதைத் திரும் பச் திரும்பச் செய்து சொல்லப் பழக்கவேண்டும்.

—1ம் 1ம்=2. 2ல் 1 எடுக்க, 1 பிறகு இரண்டு காட்டும் கட்டை யுடன் ஒன்று காட்டும் கட் டையை சேர்த்து அது அடுத்த தற்கு சமம். அதை முன்போல வே செய்துக்காட்டி 3 என்று உணர்த்தவேண்டும். பிறகு ஒன்று எடுத்து 2 ஆவதைக் காட்டிச் சொல்லச் செய்க:—

2ம் 1ம்=3
3ல் 1 எடுக்க=2
1ம் இரண்டும்=3
3ல் 2 எடுக்க=1

என்பதை பிள்ளை எளிதல் செய்து சொல்லப் பழகும்வரை யில் திரும்பச் திரும்பச் செய்ய வேண்டும்.

தன் சுற்றப்புறத்திலுள்ள பொருள்களை 3 வரை எண்ண வில் பழக்கவேண்டும். இப்படியே 5,6,7,8,9,10, வரை போதிக்க வேண்டும்.

வேண்டியவை 1,3,4 காட்டும் கட்டைகள்.

3ம் 1ம்=4 4ல் 3 எடுக்க 1
1ம் 3ம்=4 4ல் 1 எடுச்க 3

**5ம் போதனை வாய்பாடு.**

வேண்டியவை 1,4,5 காட்டும் கட்டைகள்.

4ம் 1ம்=5 5ல் 4 எடுக்க 1
1ம் 4ம்=5 5ல் 1 எடுக்க 4

**6ம் போதனை வாய்பாடு.**

வேண்டியவை 1,5,6 காட்டும் கட்டைகள்

5ம் 1ம்=6 6ல் 5 எடுக்க 1
1ம் 5ம்=6 6ல் 1 எடுச்க 5

**7ம் போதனை வாய்பாடு.**

வேண்டியவை 1,6,7 காட்டும் கட்டைகள்.

6ம் 1ம்=7 7ல் 6 எடுக்க 1
1ம் 6ம்=7 7ல் 1 எடுக்க 6

**8ம் போதனை வாய்பாடு.**

வேண்டியவை 1,7,8 காட்டும் கட்டைகள்.

7ம் 1ம்=8 8ல் 1 எடுக்க 7
1ம் 7ம்=8 8ல் 7 எடுக்க 1

**9ம் போதனை வாய்பாடு.**

வேண்டியவை 1,8,9 காட்டும் கட்டைகள்.

8ம் 1ம்=9 9ல் 1 எடுக்க 8
1ம் 8ம்=9 9ல் 8 எடுக்க 1

**10ம் போதனை வாய்பாடு.**

வேண்டியவை 1,9,10 காட் டும் கட்டைகள்.

9ம் 1ம்=10 10ல் 1 எடுக்க 9
1ம் 9ம்=10 10ல் 9 எடுக்க 1

பிறகு 1 முதல் 10 வரை எண்ணக் கற்றுக் கொடுக்கவேண் டும். பிறகு ஒரு எண்ணைச் சொல்லி இது எதனுடன் ஒன்று சேர்க்க ஆகும், எதிலிருந்து 1 எடுக்க ஆகும் என்பதை வர வழைத்தலில் உபகரணம் கொண்டு சொல்லில் பழக்க வேண்டும். பிறகு இதையே இதற்கு அடுத்த சிறியது எது? பெரியது எது? என்று கேட்டு வரவழைத்துப் பழக்கவேண்டும். பிறகு எதேனும் (10க்குள்)

## ஆசிரியப் பயிற்சிசாலைகளை ஆதாரக் கல்வி பயிற்சிசாலைகளாக மாறுவதை வரவேற்கிறோம்

நமது மாகாணமெங்கும் ஆதாரக் கல்வி முறையை அனுசரிக்கவேண்டும் என்னும் கொள்கையைச் சர்க்கார் அனுமதித்துள்ளார்கள். அது காரணம் பற்றி, ஆசிரியருக்குப் பயிற்சியளிக்கும் பாடசாலைகளைத் திருத்தி அமைக்கும் தொழில் ஒழுங்கான முறையில் நடைபெற்று வருகிறது.

நமது மாகாணத்தில் தற்போது 35 ஆதாரக் கல்வி பயிற்சிசாலைகள் இருக்கின்றன. இன்னும் 5 வருஷகால முடிவுக்குள் எஞ்சிய ஆசிரியருக்குப் பயிற்சியளிக்கும் பாடசாலைகள் 135-ஐயும் ஆதாரக் கல்வி பயிற்சிசாலைகளாக்க வேண்டுமென்று சர்க்கார் விரும்புகின்றனர். அதுவுமில்லாமல், இனிமேல் ஆரம்பித்து வைக்கப்படும் புதிய கல்விப் பயிற்சி பாடசாலைகள் யாவும் ஆதாரக் கல்வி முறையை அநுசரிப்பவைகளாக இருக்கவேண்டுமென்பது சர்க்கார் அவாவாகும்.

ஆதாரக் கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர் நாட்டுச் சமுதாய செல்வ நிலையை உயர்த்தும் வகையில் உற்பத்தித் தொழிலில் ஈடுபடக் கூடிய நபர்கள் அடங்கிய ஒரு கூட்டுறவுச் சமூக முறையை உருவாக்கும் தன்மை வாய்ந்தவராய் இருப்பர் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவ்வாசிரியர் பயிற்சி பெற்று வரும்போதே, ஆதாரக் கல்வி முறைக்குரிய புதிய பழக்க வழக்கங்களிலும், யோக்யங்களிலும் பண்பட்டொழுகுவதற்கான பயிற்சியும் அவருக்கு அளிக்கப்படும். அதனால் அவர் பயிற்சி பெறும்போது பயிற்சிசாலையிலே வசித்து வரவேண்டும். ஆதாரக் கல்வி பயிற்சி பாடசாலையின் பாட முறைக்கேற்றவாறு அவருடைய அன்றாடத் தொழில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

### சுயதேவை பூர்த்தி

ஆதாரக் கல்வி பயிற்சிசாலை, சுயதேவையைப் பூர்த்திசெய்து

---

இரண்டு எண்களைச் சொல்லி எது பெரிது, எது சிறிது என்பதைக் காணலில் பழக்கவேண்டும். பிறகு கட்டைகளை முன்போல் வரிசையாக அடுக்கி எண்ணச் செய்யவேண்டும். பிறகு சொல்லிய எண்ணைக் குறிக்கும் கட்டையையும் ஏதேனும் ஒரு கட்டை எடுத்து அது குறிக்கும் என்பதையும் சொல்லலில் பழக்கவேண்டும்.

மனப்பாடம் செய்விக்க வேண்டியது

1ம் 1ம்=2 5ம் 1ம்=6
2ம் 1ம்=3 6ம் 1ம்=7
3ம் 1ம்=4 7ம் 1ம்=8
4ம் 1ம்=5 8ம் 1ம்=9
9ம் 1ம்=10

இதனால் 10 வரை எண்ணவில் பழக்கமும் எண்களின் மதிப்பையும் உணரும் சக்தியை குழந்தை பெறும்.

கொள்ளக்கூடிய தொரு சமுதாயமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பயிற்சி பெறுவோர் அனைவரும் ஒன்று சேர்ந்து அந்த ஸ்தாபனத்திற்குரிய தேவைப் பொருள்களை உற்பத்தி செய்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அவர்கள் துணி வகைகளையும், உணவு வகைகளையும் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இவ்விருவகை முக்கிய ஆதாரத் தொழில்கள் நீங்கலாக, தச்சுவேலை, கருமார் வேலை, காகிதப்பட்டறை, இதர குடிசைக் கைத்தொழில்கள் ஆகியவற்றை அவற்றுக்கான வசதிகள் உள்ள இடங்களில் ஆதாரக் கைத்தொழில்களாக நடத்தி வரவேண்டும். பயிற்சி ஆசிரியர் இவ்வாதாரக் கைத்தொழில்களுள் ஒரு கைத்தொழிலில் பூர்ண தேர்ச்சியும், உதவி கைத்தொழில்களுள் சில வற்றில் தொழில் அனுபவமும் பெறவேண்டும்.

பாடசாலையைச் சுகாதார முறையில் சுத்தமாக வைத்திருத்தல் அப்பாடசாலையில் பயிற்சி பெறுவோரின் பொறுப்பாகும். மலஜலக் கழிவுகள் மிகவும் ஒழுங்கான முறையில் அகற்றப்படவேண்டும். அக்கழிவுகளினின்று விவசாயத் தொழில்களுக்குப் பயன் தரக்கூடிய உரம் உற்பத்தி செய்யவேண்டும்.

ஆதாரக் கல்வி பயிற்சி பாடசாலைகளிலுள்ள ஒவ்வொரு பகுதியும் சேவை செய்வதற்கு ஒவ்வொரு கிராமத்தைத் தெரிந்து எடுத்துக்கொள்ளுகிறது. அவ்வாறு தெரிந்தெடுக்கப்பெற்ற கிராமங்களின் பொருளாதார, சமூக, கல்வி சம்பந்தமான நிலைமைகள் ஒழுங்காகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அவ்விதம் பரிசீலிப்பதால், பயிற்சி பெறுவோர் கிராம அபிவிருத்தி சம்பந்தமான பிரச்னைகள் யாவற்றையும் தீர்க்கும் திறமையைப் பெறுகிறார்கள். மானிட சரீர தத்துவங்களைக் குறித்தும், மக்களுக்கு வேண்டிய உணவு, தொழில், ஓய்வு, பொழுது போக்கு முதலியவற்றைக் குறித்தும் அநுபவத்தின் மூலம், பயிற்சி பெறுவோர் அறிந்து கொள்ளுகிறார்கள்.

பாடசாலை நடவடிக்கைகள் யாவற்றையும் பயிற்சி பெறுவோரே பிரஜாபாத்திய முறைப்படி (Democratically) நடத்தி வரவேண்டும். மந்திரிசபை நிருவப்படும். மாதத்துக்குஒருமுறை மந்திரி சபைக்குரிய மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பாடசாலை சம்பந்தமான நெசவு, விவசாயம், சமையல் தொழில் வகுப்பு நிர்வாகம், சுகாதாரம், ஜல சப்ளை, கலாசார நடவடிக்கைகள், நிதியாட்சி முதலிய இலாக்காக்களை சரிவர நிர்வகிக்கும் பொறுப்பு இம்மந்திரி சபையினதாகும். கிராமப் பஞ்சாயத்து முறையில் இந்த மந்திரிசபை அமைக்கப்பட்டிருக்கிறது. பாடசாலையைச் சேர்ந்தோர் அனைவரும் அச்சபையுடன் ஒத்துழைக்கவேண்

# குடியரசு அமைப்பில் ஆரம்ப ஆசிரியர்

திரு. T. R. சாமி, சென்னை.

இன்று நாம் அனைவரும் சுதந்திர இந்தியாவில் வாழ்ந்து வருகின்றோம். சுதந்திரம் என்றாலே எல்லோருக்கும் ஒரு தனித்த ஆனந்தம் உண்டாகிறது. விலங்குகள், புட்கள் மற்றுமுள்ள ஜீவராசிகள் சுதந்திரத்துடன் வாழ விரும்புகின்றனவென்றால் மனிதன் இன்பம் அடைவதில் என்ன ஆச்சரியம்? அதிலும் ஜனவரி 26வயிலிருந்து இந்தியா குடியரசு நாடாகிவிட்டதைப்பற்றி மக்கள் முன்னிலும் அதிக இன்பம் அடைந்திருக்கின்றனர்.

இவ்விதம் நாம் இன்பம் அடைவதற்குக் காரணமாகவிருந்த நம் தேச பக்தர்களுக்கு நமது நன்றியைச் செலுத்துவோமாக. நாம் இன்பம் அடைவது பெரிதல்ல. ஆனால் அடைந்த சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்வதுதான் மிகமிக அவசியமாகின்றது. இதுதான் மக்கள் கடமைகளில் முதல் கடமையாகும். இதற்கு மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியும், நல்ல அறிவுத்திறனும் அமையவேண்டியது இன்றியமையாததாகும். இதற்கு மக்களிடையே கல்வியை, சிறந்த முறையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும். ஆசிரியர்கள், எதிர் காலத்திய குடிமக்களை

---

டும். அச்சபையோரும் தங்கள் நடவடிக்கைகளுக்கு ஜவாப் சொல்லவேண்டியிருக்கிறது. இச்சமூகப் பயிற்சி அப்பாட சாலைகள் தேசிய முக்கியத்துவம் பெற்று அபிவிருத்தியடைகின்றன. ஆதாரக்கல்வித் திட்டம் பொறுப்புணர்ச்சி பெற்ற பிரஜா பயிற்சிக்கு அடிசோலுகிறது.

பயிற்சி பெறுவோர்களின் பாடமுறைகளில் புனித கலைகளைக் குறித்த விஷயங்களும் அடங்கியிருக்கின்றன, அதனால் அவர்களுடைய வாழ்க்கை கலைகளுடன் கலந்த தொன்றாகும் சமய, தேசிய, பருவகால விழாக்கள் ஒன்றோடொன்று கலந்து ஒரே தன்மை பொருந்தி வாழ்க்கையை மிளிர வைக்கவேண்டும். திருவிழாக் காலங்களிலும், இதர விசேஷ கேளிக்கை தினங்களிலும், கலை, சங்கீதம், நாடகம், கூத்து, ஆகியவற்றில் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் கலந்து கொள்வதால், அவர்கள் தக்க அநுபவத்தைப் பெறுவதோடு, அவைகளைத் தேசிய மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் உணருகிறார்கள்.

இந்த அடிப்படையில்—அதாவது கைத்தொழிலும், கலாசாரமும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில்—பயிற்சிப் பாடசாலைகள் அமைக்கப் பட்டிருப்பதால், பயிற்சி பெறுவோர், குழந்தைகளுக்கு கைத்தொழில், கலாசார நடவடிக்கைகள் மூலம் அறிவை யூட்டும் நுணுக்கத்தை எளிதில் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

சரியானபாதையில் செலுத்தும் வழி காட்டிகளாக விளங்குகின்றனர். அதிலும் எதிர் காலத்திய மக்களான இக்காலத்திய சிறுவர்களை நல்ல முறையில் பழக்கம் அடையச் செய்கின்றவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள் என்பதை யார் மறுக்க முடியும்?

எனவே, ஒரு நாடு கல்வித்துறையில் சிறந்து விளங்கவேண்டுமானால், அது ஆரம்ப ஆசிரியர்களைப் பொறுத்துதான் இருக்கிறது. துள்ளித் திரிகின்ற காலத்தில் அடுக்கடக்கி, கல்விச் செல்வத்தை அள்ளிக் கொடுக்கும். ஆரம்ப ஆசிரியர்கள் அல்லவா நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்குபவர்? இன்று நம்முன்னர் தோன்றும் பட்டதாரிகளும், உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் சிறந்த பேச்சாளர்களும், திறமைசான்ற எழுத்தாளர்களும் தத்தம் இளமையில் ஆரம்ப ஆசிரியரிடம் பயின்றவர்கள் என்பதை அவர்கள் மறுக்க முடியுமா? அல்லது மற்றவர் எதிர்க்க முடியுமா? இத்தகைய பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள் என்பதை மக்கள் உணர்கின்றனரா? அல்லது இனியாவது உணர்வார்களா?

இக்காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களின் நிலை எங்ஙனம் இருக்கிறது என்று சிறிது சிந்திக்கவேண்டாமா? பாடசாலையில் படிக்கும் ஒரு மாணவன் தனது படிப்பு முடிந்தபிறகு ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவதற்கு விரும்புவதில்லை; அவனது தகப்பனும் அவனை, அத்தொழிலில் அவனை அனுப்புவதற்குச் சம்மதிப்பது கிடையாது? ஏன்? குறைந்த சம்பளந்தான்? ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் என்ன? இருபத்தைந்தும் பத்தொன்பதுந்தானே? மற்ற இலாக்காக்களில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்தது 1 நாளைக்கு 1 ரூபாயாவது அடிப்படைச் சம்பளம் இருக்கவேண்டும் என்று இருக்கிறபொழுது ஆரம்ப ஆசிரியர்கள்மட்டும் என் அவ்விதம் குறைந்த சம்பளம் கொடுக்கப்படல்வேண்டும்? பணம் இல்லை கொடுக்க முடியவில்லை என்பது காரணமாகாது. மற்ற விஷயத்தைவிட கல்வி மிக, மிக முக்கியமானது என்பது தோன்றினால் பணம் எங்கிருந்தாவது ஓடி வரும் அல்லவா?

சில மேடைப் பேச்சாளர்கள் ஆரம்ப ஆசிரியர்கள் அதிக சம்பளத்தை எதிர்ப்பார்ப்பது கூடாது. திருப்தியுடன் வேலை செய்யவேண்டும். பிள்ளைகளிடம் குடும்பக் கவலைகளை வைத்துக்கொண்டு கோபக் குறிகளுடன் தோன்றுவது கூடாது. விளையாட்டு முறையில் கல்வி கற்பிக்கவேண்டும். அநேக புஸ்தகங்களையும் செய்தித் தாள்களையும் வாங்கிப் படித்துத் தங்கள் அறிவை விசாலப்படுத்திக்கொள்ளவேண்டும். என்றெல்லாம் பேச்சுகளை வாரி வாரி வழங்குகின்றனர். இவ்விதம் பேசுகின்றவர்கள் முதலில் ஊதிய அதிகரிப்பை எதிர்ப்பார்க்காமல் தம் பணியைச் செய்து முடிப்பாரா?

அரசாங்க உத்தியோகஸ்தர்களும், கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்களும் வீட்டு வாடகை அலவன்ஸ் பெறுகின்றார்கள். சம்பளம் அதிகமாக வாங்கும் உத்தியோகஸ்தர்கள் வீட்டு வாடகை அலவன்ஸ் வாங்குகிறார்கள். ஆனால் சம்பளம் குறைவாக வாங்கும் ஆரம்ப ஆசிரியர்கள் என்ன வாங்குகின்றனர். அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் எங்கே? அவர்களுக்கு வீடு தனியாக

கட்டப்பட்டு இருக்கின்றனவா? இதை ஆரம்ப ஆசிரியர்கள் நினைத்துப் பார்த்தால் எவ்வளவு உற்சாகமாக வேலை செய்வார்கள்?

இதற்கெல்லாம் காரணம் என்ன? ஆரம்ப ஆசிரியர்களின் நிலையைப் பற்றி அரசாங்கத்தாருக்கு தகுந்த முறையில் எடுத்துரைப்பவர்கள் இல்லாமையே இதற்குக் காரணம்.

அதனல் யாது செய்தல்வேண்டும் ஆரம்ப ஆசிரியர்கள் தங்களிடையில் ஒற்றுமையை வளர்க்க வேண்டும். எண்ணிய எண்ணியாங்கு யெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெரின்' என்ற பொய்யா மொழியின்படி தமது காரியத்தில் திடசித்தம் உடையவர்களாக விளங்க வேண்டும். குடியரசு அமைப்பில் ஆரம்ப ஆசிரியர்கள் சிறந்த பங்கெடுத்துக்கொண்டு தேசத்திற்கு உழைக்கவேண்டும். தங்கள் நிலையைப்பற்றியும், பொதுவாக ஆரம்பக் கல்வி எவ்விதம் நடத்தப்படவேண்டும் என்பதை அரசாங்கத்தாருக்குத் தெளிவாக எடுத்துரைக்க மாகாண சபைகளில் ஆரம்ப ஆசிரியர்கள் அங்கத்தினராக அமர்தல்வேண்டும். மேல் சபையிலும், கீழ்ச் சபையிலும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு இடம் இருந்தால் ஆரம்ப ஆசிரியர்களின் நிலை இவ்வளவு மோசமான நிலைமையில் இருக்க முடியாது. ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளைப்பற்றி ஆரம்ப ஆசிரியருத்தான் நன்ருகத் தெரியும். கல்லூரி ஆசிரியர்கள், நடுத்தர பாடசாலை ஆசிரியர்கள் முதலியாளர்கள் அச்சபைகளில் இருக்க இடம் இருப்பினும் ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை அவர்கள் நன்கு உணரமாட்டார்கள்.

எனவே ஆரம்ப ஆசிரியர்கள் மாகாண சபைகளில் தங்களுக்காக இடம் இருக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி, பல கூட்டங்கள் மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும் அரசாங்கத்தாருக்கு தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

இதற்கு இடைவிடாத முயற்சி வேண்டும் என்பதை ஆரம்ப ஆசிரி மறந்துவிடக்கூடாது. இன்று நாம் குடியரசு நாட்டை பெற்றிருப்பதற்குக் காரணம் முயற்சிஎன்பதை யார் மறுக்கமுடியும். உலையாமுயற்சிகளை காணு ஊழின் வலி சிந்தும் வன்மையும் உண்டே என்பதாலும்.

"அருமை உடைத்தென்று அசாவா
மை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்ற குறளின்படியும் முயற்சியினல்எதையும் சாதிக்கலாம். அதனல் பெருமையையும் அடையலாம் என்பதை ஆரம்ப ஆசிரியர்கள் நன்கு உணர்ந்து முயற்சியுடன் நடக்க வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள் தமது உரிமையைப் பெறுவதற்காகத் தங்கள் கடமையைப் புறக்கணித்துவிடுதல் கூடாது. ஒற்றுமை யுணர்ச்சி ததும்பப் பெற்றவர்களாகவும், திடசித்தம் உடையவர்களாகவும், தங்கள் கடமைகளில் குற்றம் காண இடங் கொடாதவராயும், நியாயம் தவறியவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் இருந்து தமக்கு வேண்டிய உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று குடியரசு நாட்டில் இன்புற்று வாழ்வாராக.

# ஆசிரியரும் அரசியலும்

இன்று எங்கும் பேசப்படு கின்ற ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஆசிரியரின் பொறுப்பையும் அரசியலின் முக்கியத்துவத்தையும் ஒருவாறு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆதாரக் கல்வியென்பது இள வயதில் அளிக்கப்படும் கல்விக் கட்டடம் எழுப்புவதற்கு இது ஆதாரமாக அடிப்படையாக இருக்கவேண்டும் என்பதே இளைஞர்களுக்குள்ள பகுத்தறிவு பாதிக்கப்படாமல் வளர்க்கப்பட வேண்டும். ஆகவே இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று உணராமலிருக்க முடியாது. இத்தகைய அடிப்படைக் கல்வியின் திட்டத்தையும் அதை அமுல் நடத்தும்போது அது சிறந்த முறையில் இளைஞர்களுக்குப் பயன் படவேண்டுமானால் இதில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் அவசியம்.

இந்த அடிப்படைக் கல்வியானது இளைஞர்களின் சுமார் ஏழு அல்லது எட்டாவது வயதில் ஆரம்பிக்கப்படுகின்றது. இது சாதாரணமாக இப்பொழுது நடக்கும் ஆரம்பப் பள்ளிகளில் போதிக்கப்படும் பாடத்திட்டப்படி அல்ல. சிறுவர்களின் சக்தியை யுணர்ந்து, அச்சக்தி வீண் போய்விடாமல் அதையே பயன் படுத்திக்கொண்டு அவர்களுக்கு அறிவைப் புகட்டும் முறை. வெறும் அ, ஆ முதல் மொழியிலுள்ள எழுத்து வரிசைகளை மட்டும் பாராயணம் நடத்துவதல்ல. இதற்காக ஒரு ஆசிரியரைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதுமில்லை. குழந்தைகளின் பார்வையைச் சுற்றுப்புற காட்சிகளில் நோக்கவிடாமல் குறிப்பிட்ட ஒரே இடத்தில் நோக்கச் செய்து அதையே பன்னிப் பன்னி படிக்கச் செய்யும் முறையில்லை. இதற்கு ஒரு திறமை மிக்க ஆசிரியரும் தேவையில்லை. பின் இந்த முறை எப்படிப்பட்டது. சிறு பிள்ளைகள் ஏதாவதொன்றை 'குறு குறு' வென்று செய்து கொண்டேயிருப்பார்கள். அவர்கள் எப்பொழுதும் சோம்பித் திரியாமல் விளையாட்டிலோ அல்லது வினையிலோ ஈடுபட்டிருப்பார்கள். ஆகையால் இவர்களை ஒரு தொழிலில் ஈடுபடுத்தி அத்தொழிலின் மூலமே அவர்களுக்கு எழுத்தறிவையும் மற்ற சரித்திரம் பூகோளம், சாஸ்திரம் இவைகளைப்பற்றியும் கற்றுக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம். உதாரணமாக சர்க்காவைக் கொண்டு நூல் நூற்கிறார்கள் என்றால் நூல் நூற்க பஞ்சு அவசியமல்லவா. அதனால் பஞ்சைப்பற்றிய விஷயங்கள் அவனுக்குப் போதிக்கப்படும். அது எங்கு, எப்படி விளைகின்றது. பஞ்சாக நமக்குக் கிடைக்க எவ்வளவு வேலைப்பாடுகள் உள்ளது. நாட்டிற்கு முழுவதும் பஞ்சு கிடைக்க என்ன முயற்சிகள் எடுக்கப்படவேண்டும், இந்த

கைய விஷயங்கள் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும், இதோடு மட்டுமல்ல. உற்பத்தி செய்யப்பட்ட துணி எவ்வாறு விற்பனை செய்யப்பட்டால் எவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றது. நம் நாட்டிலுமல்லாமல் அயல்நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டால் அது எங்கு, எந்த முறையில், என்ற இது போன்ற விஷயங்கள் போதிக்கப்படும். இவ்வாறு அவர்களுக்கு ஒருவாறு தொழிலறிவு போதிக்கப்பட்டபின், தனிப்பட்ட தொழில் அல்லது மற்ற அறிவு இயல் நுணுக்கங்களில் தேர்ச்சியடைய பிரத்யேகமாக போதிக்கப்படும்.

இத்திட்டத்தில் சிறுவர்களுடைய வாழ்நாள் ஆசிரியனிடமே ஒப்படைக்கப்பட்டு விடுவதால் ஆசிரியனுடைய பொறுப்பு இன்னும் அதிகமாகிறது. இவர்களுடைய உடல் வளர்ச்சிக்கும், உள்ள வளர்ச்சிக்கும் ஆசிரியனே காரணமாகின்றான். இதற்குரிய சட்ட திட்டங்களை ஏற்படுத்தி அவைகளை ஒழுங்காக கடைப்பிடிக்க ஆசிரியனுடைய உதவி மிகவும் அவசியமாகும். சிறுவர்களுடைய உள்ளங்கள் தளிர் போன்றவை, மென்மையானவை ஆனால் உணர்ச்சி மிகுந்தவை. சுற்றுப்புறத்தை அறிந்து கொள்ள ஆவலுள்ளனவாக இருக்கும். இதையெல்லாம் உணர்ந்து ஆசிரியன் தன் கடமையைச் செய்யவேண்டும்.

இத்தகைய திட்டத்தில் அரசியல் அறிவு இல்லாமல் ஒரு சிறுவன் வளர்க்கப்பட்டு விடுவானானால் நிலைமை எப்படியிருக்கும் என்பதைப் பார்ப்போம். இப்பொழுது அரசாங்கம் குடியரசு, குடிகளின் பிரதி நிதிகள் ஆட்சியாளர்களாக இருக்கிறார்கள். நாட்டில் எந்த கட்சி மெஜாரிட்டியாக இருக்கிறதோ அக்கட்சி ஆட்சிக்கு வந்துவிடுகின்றது. அக்கட்சியிலோ நாட்டின் நிர்வாகத்திற்கு ஆட்கள் நாட்டு மக்களாலேயே ஓட்டு மூலமாகப் பொறுக்கி யெடுக்கப்படுகிறார்கள். ஆகவே மக்கள் யாரைத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்களே மக்களை ஆளத் தொடங்கி விடுவார்கள். திறமையும், பொறுப்புள்ளவர்களையும் தேர்ந்தெடுத்தால் நிர்வாகம் சிறப்பாக இருக்கும். இல்லையெனில் நிலைமை மோசமாகிவிடும்.

ஒரு தனி மனிதன் மற்றவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டின் நிர்வாகம் அவனிடம் ஒப்படைக்கப்பட்டால் அதற்கும் அவன் பாத்திரமாயிருக்க வேண்டுமல்லவா! குடியரசிலே ஒவ்வொரு தாயும் தன் மகன் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று ஆசைப்படுவாள் என்று சொல்லுகிறார்களே அதற்கு அவன் அடிப்படைக்கல்வி அமைய வேண்டுமல்லவா. ஆகவே ஒவ்வொருவனும் நாட்டின் நிர்வாகத்திற்குப் பொறுப்பும் தகுதியுமுள்ளவர்களை தேர்ந்தெடுப்பதிலும் சமயம் நேர்ந்தால் தானே ஆட்சியாளனாக மாறினால் அதற்குத் திறமையுள்ளவனாகவும், ஜனாதிபதியாக வந்தால் அதை

# குடியரசில் ஆசிரியர் சங்கம்

ஒவ்வொரு மாவட்டமும் (Range) ஐந்து அல்லது ஆறு வட்டங்களாகப் (Centres) பிரிக்கப்பட்டுளது. ஒவ்வொரு வட்டத்திலுமுள்ள ஆரம்ப ஆசிரியர்களை ஒன்று சேர்த்து ஒரு சங்கம் தோற்றுவிக்கப்பட்டுளது விரும்பினாலும் விரும்பாமற் போனாலும் அங்கீகாரம் பெற்ற ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களனைவரும், ஆண்டுக்கொருமுறை அணா 8 செலுத்தி, சம்மந்தப்பட்ட சங்கங்களில் அங்கத்தினராகச் சேர்ந்தே தீரவேண்டும், ஒவ்வொரு வட்டமும் அந்தரேஞ்சு அதிகாரியின் தலைமையில் மாத மொருமுறை கூட வேண்டும். அன்று அந்த வட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு விடுமுறை. ஆஜராகாத அங்கத்தினர்களுக்கு 2 நாள் சம்பளம் பிடித்தம்போன்ற சில தண்டனை. இதற்கென்று கிராமங்களிலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் கட்டுசாதத்துடன், கொட்டு மழையாயினும், சுட்டு வெயிலாயினும், குறித்த இடத்திற்கு வந்தே தீர வேண்டும். சிலர் குறைந்தது ஆறு மைல் தொலைவும் நடக்கவேண்டியிருக்கிறது.

சாதாரணமாகக் கூட்டத்தில் நடப்பதெல்லாம் ரேஞ்சு அதிகாரிகள், பள்ளிகளைப் பார்வையிட்ட காலங்களில், தாங்கள் கண்ட குறைபாடுகளை விளக்குதலும், அரசாங்க அறிக்கைகளைப் படித்தலும் போன்றவையே. சில சமயங்களில் அவர்களிடையே உள்ள ஒருவர் மாதிரிப் பாடம் கொடுப்பார். அதை மற்றவர் அனுபவிக்கவேண்டும்! இல்லை பிரிந்துகொள்ளவேண்டும். அனேக காலங்களில் தலைவர் வராமலே கூட்டம் இனிது கலைவதும் உண்டு!

நிர்ப்பந்தப்படுத்தி வசூலித்த சந்தாத் தொகையை எதற்கும் செலவு செய்யவும் கூடாது. தலைவர்களுக்கு மாலை மரியாதைகட்காவது ஒரு காசும் செலவிடக்கூடாது.

அன்னியராட்சியில் கல்வியின் நிலையும் ஆசிரியரின் பொறுப்பும் கேள்வி முறையற்றுக் கிடந்தது. அதைக்குறித்து சிந்திக்கவோ பேசவோ யாருக்கும் உரிமையற்று இருந்தது. இப்போதோ நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. அண்ணல் காந்தியடிகளும், பிற தலைவர்களும், ஆயிரமாயிரம் சகோதர சகோதரிகளும் அரிய தியாகங்களைப் புரிந்து சுதந்

---

யும் ஏற்றுக்கொள்ள சாமர்த்தியம் உள்ளவனாக இருக்கவேண்டுமல்லவா! இதற்கெல்லாம் கல்வியினால் அஸ்திவாரம் போடுவது ஆசிரியனது கடமையல்லவா?

வருடக்கணக்கில் தங்கள் வாழ்நாட்களை செலவழித்துப் பல துறைகளில் நுணுக்கம் நுணுக்கமாக கல்வி பயின்று அக்கல்வி தனக்கும், நாட்டிற்கும் பயன் படவில்லையானால் அதைப்பற்றி நினைப்பதில் என்ன நன்மை? ஆகவே தக்க பருவத்தில் போதுமான கல்வியைப் பயின்று ஒவ்வொருவருடைய மனித சக்தி நாட்டிற்குப் பயன் படுவதாகுக. அதற்குநம் தேசப் பிதா நீட்டிய இந்த ஆதாரக் கல்வித் திட்டம் நல்லதோர் பலனை விளைக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

திரத்தை வாங்கித் தந்தார்கள். அந்தத் தியாக புருஷர்களும், ஜீவன் முக்தர்களும் என்ன எதிர்ப்பார்க்கின்றனர்? 100-க்கு 92 பேர் தற்குறிகளாக உள்ள நம் பாரத நாட்டை 100-க்கு 100பேரும் கல்வி அறிவுள்ள நாடாகச் செய்யவேண்டுமென்பதே. இச் சீரிய தொண்டை நிறைவேற்ற ஆரம்ப ஆசிரியர்களால்தான் முடியும். அதற்கு ஆசிரியர் சங்கங்கள் திறம்பட நடத்தப்படல்வேண்டும்.

இச் சங்கங்களைத் திறம்பட நடத்தவும் ஆசிரியர்களின் நிலையை உயர்த்தவும் எனது அனுபவத்திற் கண்ட சிலதிட்டங்களைத் தருகிறேன் ரேஞ்சு அதிகாரிகள் இவற்றை நடைமுறையில் கொண்டுவந்தால் நல்ல பலன் கிடைக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

## தொகுதிச் சபை (Range Council)

ஒரு ரேஞ்சு அதிகாரியின்கீழுள்ள எல்லா சங்கங்களையும் இணைத்து, கல்வி சம்பந்தமான கண்காட்சிகள், மறு பயிற்சி வகுப்புகள், உல்லாசப் பிரயாணங்கள், விளையாட்டு விழாக்கள் முதலியவைகளைத் தொகுதி முழுமைக்குமே திறமையுடனும், தீவிரமாகவும் நடத்தவும், இச் சபைக்கு அதிகாரமுண்டு. இதில் ரேஞ்சு அதிகாரி தலைவராகவும், ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் உபதலைவராகவும், சங்கக் காரியதரிசிகளும், பொக்கிஷதார்களும் சபையினராகவும் இருக்கவேண்டும். இச்சபையினர் தமக்குள் ஒருவரை தொகுதி காரியதரிசியாகவும், மற்றொருவரை தொகுதி பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கவேண்டும். தலைவரும் இச்சபையினரும் கலந்து நிர்ணயித்த கடமைகளும் தீர்மானங்களும் மற்ற சங்கங்களைக் கட்டுப்படுத்தும்.

## மறு பயிற்சி வகுப்பு.

சங்கத்தின் சார்பில் ஆண்டுக்கொருமுறையேனும் தமிழ், கணிதம், பொது அறிவுபோன்ற பாடங்களுக்கு, முன்னதாகவே திட்டம் தயாரித்துக்கொண்டு (Syllabus), அறிவும் அனுபவமு மிகுந்த பேராசிரியர்களைக் கொண்டு மறுபயிற்சி வகுப்புகள் நடத்தவேண்டும். இவ் வகுப்பை யாவருக்கும் பொதுவான ஒரு இடத்திலும் சனிக்கிழமைதோறும் தொடர்ந்தும் நடத்தல் சிறந்தது. இதற்கான செலவுக்கு ஆசிரியர்களிடமிருந்து சிறிது கட்டணமும் மிகுதிக்குச் சங்கத்தின் நிதியிலிருந்தும் எடுத்துக்கொள்ளலாம்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களே ஆயினும் ''பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழுவமைதியானே'' என்றவாறு பலதிறப்பட்ட ஆசிரியர்களின் முறைகளைக் கேட்டலினால், தங்கள் அனுபவத்தோடு மறு பயிற்சியில் தெரிந்துகொண்டவற்றையும் கலந்து, புதிய புதிய முறைகளில், பாட போதனைகளை இயற்றும் சக்தி இயற்கையாகவே மேன்மையடையும்.

மறு பயிற்சி வகுப்புகள் முடிந்த பிறகு, பயிற்சியில் கலந்து கொண்டவர்களை, பயிற்சி சம்பந்தமான கட்டுரைகள் எழுதச்செய்தும், உபகாரணங்கள் தயாரிக்கச் செய்தும், பொருட் காட்சிகள் நடத்தி, சிறந்தவைகளுக்குப் பரிசுகள் வழங்கினால் ஆசிரியர்களுடைய ஊக்கமும் முயற்சியும் எவ்வளவு சிறந்து விளங்குமென்பதை விளக்கவேண்டுவதே இல்லை.

## உயர்தர படிப்புக்கான வகுப்புகள்.

பெரும்பாலும் ஆரம்ப ஆசிரியர்கள் 8-ம் வகுப்பு வரைதான் படித்தவராக இருப்பர். சமீபத்தில் கல்வி யிலாகா டைரக்டர் அவர்கள் காட்டியுள்ள சலுகையின்படி ஹையர் கிரேட் ஆசிரியர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களால் மாற்றிக் கொள்ள வசதி ஏற்பட்டுளது. "கற்றது கைம்மண்ணளவுகல்லாதது உலகளவு என்று உற்ற கலைமடைந்தை ஓதுகிருள்" ஆதலால் ஆசிரியர்கள் தங்கள் கல்வியை மேலும் மேலும் விருத்தி செய்யவேண்டியது இன்றியமையாதது. கல்வியை விருத்தி செய்தால் உத்தியோக உயர்வும் ஏற்படும். எனவே ஆசிரியர்களிடம் குறைந்த கட்டணம் வசூலித்து சங்கத்தின் ஆதரவில் S. S. L. C. வகுப்பும், அதில் தேர்வு பெற்றவர்களுக்கு செகண்டரி T. S. L. C. வகுப்பும் நடத்திஞல் பெருவாரியான ஆரம்ப ஆசிரியர்கள் எளிதில் மேற்கண்ட தேர்வுகளில் வெற்றி பெறுவார்கள். அதனுல் தமது அந்தஸ்தையும் உயர்த்திக்கொள்வதோடு பிள்ளைகளுக்கும் பண்பட்ட முறையிலே பாடங்களைப் போதிக்கவும் இயலும் மேலும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களின் பத்தாக் குறைக்கும் பரிகார மேற்படும்.

## மாதிரிப் பாடங்கள்.

ஒரு ஆண்டில் 10 கூட்டங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கூட்டமும் சுமார் 2½-மணி அவகாசம் நடைபெறுகிறது. தமிழ், கணிதம், பூகோளம், சரித்திரம், இயற்கை ஆகிய 5 பாடங்களுக்கும், இரண்டிரண்டு கூட்டங்களாக ஒதுக்க வேண்டும். ஒரு கூட்டத்திற்கு 5 பேர்களுக்காக இரண்டு கூட்டங்களிலும் தாமே விரும்பி மாதிரிப்பாடம் கொடுக்க முன்வரும் 10 பேர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அவர்களுள் திறமையாக நடத்தியவருக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கவேண்டும். "சுடர் விளக்காயினும் தூண்டு கோல் ஒன்று வேண்டும்" என்றபடி இத்தகைய முறைகளால் ஆசிரியர்களுடைய அறிவும் ஊக்கமும் பிரகாசமடையவும், பல புதியமுறைகளைக் காணவும் வழி ஏற்படும்.

## தொழிற் பயிற்சி.

ஆதாரக் கல்வி திட்டத்தை உலக பிதா காந்தி அடிகள் வகுத்தனர். தொழில் மூலம் கல்வியை போதிப்பதோடு, பிற்காலத்தில் மாணவர் கைகட்டி சேவகம் செய்யாமல், சுயேச்சையாகத் தொழில் செய்து, நிமிர்ந்து வாழ்வதற்கான திட்டமே ஆதாரக் கல்வியின் அடிப்படை தத்துவமாகும். மாணவருக்குத் தொழிலை போதிக்கும் ஆசிரியர் முதலில் பயிற்சிபெற்று தேர்வு பெற்றிருக்கவேண்டும். வெறும் விளக்கத்திஞல்மட்டும் (Thearitical) தொழிலை போதித்துவிட முடியாது. செயல் முறையில் (Practical) செய்து காட்டி போதிப்பதுதான் சிறந்த முறையாகும்.

ஆதலால் சங்கத்தின் சார்பில் நூற்புப்பயிற்சி, தச்சுத் தொழில் சாரணப் பயிற்சி செஞ்சிலுவைப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி, போன்றவற்றை நீண்ட நாட்கள் கொண்ட விடுமுறை நாட்களில் அளிக்கவேண்டும். இறுதியில் சிறு தேர்வுகள் அவசியம்.

## பாடி வாழ்க்கை.

சங்கத்தின் சார்பில், செஞ்சி, மகாபலிபுரம் போன்ற சரித்திர சம்

பந்தமான இடங்களுக்கோ, வேறு இயற்கை எழில் நிறைந்த இடங்களுக்கோ ஆசிரியர்களை, அழைத்துச் செல்லவேண்டும். இதற்கும் ஒரு பகுதி ஆசிரியரிடமிருந்தும், மற்ற பகுதியை சங்கத்தின் நிதியிலிருந்தும் பொருளைப் பெறவேண்டும். பாடி வாழ்க்கை குறைந்தது 3 நாட்களேனும் நடைபெறவேண்டும். அங்கும் அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள், மாதிரிப் பாடங்கள், விளையாட்டுகள் நடத்தல் முதலியன இருத்தல்வேண்டும். இதனுல் அங்குள்ள சிறப்புகளை நேரில் காணவும், தமது குடும்பத் தொல்லையை சிறிது காலம் மறந்திருக்கவும், நகரத்திலுள்ள ஆசிரியர்கள் நகரவாசத்தை விட்டு கிராம வாழ்க்கையை அனுபவிக்கவும், இடமாற்றத்தினுல் ஏற்படக்கூடிய ஆரோக்கியமும் மற்றும் பல நன்மைகளும் ஏற்படக்கூடும். ஆசிரியர்களிடையே நட்பும் வளரும்.

## விளையாட்டு விழா.

ஆண்டின் இறுதியில் பள்ளிச் சிறுவர்களை ஒள்றுபடுத்தி ஒற்றுமையை வளர்க்கவும் (Unity) ஒழுக்கம், கட்டுப்பாடு முதலியவற்றில் தேர்ச்சியடையச் செய்யவும், விளையாட்டு விழாக்கள் மிக மிக அவசியமாகும்.

ஆண் குழந்தைகளுக்குக் கூட்டு விளையாட்டுகள் (Groupgames) கூட்டு கஸரத்துகள் (Mass Drill) முதலியவைகளையும், பெண் குழந்தைகளுக்கு கும்மி கோலாட்டம் முதலிய விளையாட்டுகளும் ஏற்பாடு செய்து தொகுதியிலுள்ள எல்லாக் குழந்தைகளும் கலந்து கொள்ளும் படிச் செய்யவேண்டும். 'விளையாட்டு விழா' (Play Festival) என்ற ரஷியன் படத்தைப் பார்த்தவர்களுக்கு இது எளிதில் விளங்கும்.

## நூல் நிலையம்.

சங்கத்தின் நிதியில் ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய புத்தகங்களை வாங்கி, நூல் நிலையமொன்று செண்டர் பள்ளியில் நிறுவவேண்டும். அங்கத்தினா ஒவ்வொருவரும் இத்நூல் நிலையத்தைப் பயன்படுத்துமாறு வற்புறுத்தவேண்டும். ஆசிரியர்களும் ஓய்வு நேரங்களில் படித்து தமது ஆற்றலை விருத்தி செய்ய இயலும்.

இந்த நூல்நிலயத்திலேயே சிறந்த தேசிய தினசரிப் பத்திரிகைகளை வரவழைத்து, ஆசிரியர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படுமாறு செய்யலாம். இதனுல் ஆசிரியர்கள் உலக ஞானமும் அரசியல் ஞானமும் பெறமுடியும். ஆட்சி நூல் போதிக்கையில் மிக மிகப் பயன்படும்.

## கண்காட்சி.

ஆண்டுக்கொரு முறை ஆசிரியர்களை ஊக்கி கண்காட்சி ஒன்றை ஏற்படுத்தவேண்டும். இதனுல் புதைந்து கிடக்கும் ஆசிரியர் திறனை சுடர் விட்டெரியச்செய்து உலகம் வியக்கும்படி செய்யலாம்.

மேற்கண்ட திட்டங்களை செயல் முறையில் கொண்டுவருவதானுல், உண்மையில் ரேஞ்சு அதிகாரிகளுக்கு மேலும் மேலும் பொறுப்பும், வேலையும் உயரும். ஆனுல் ஒவ்வொரு தொகுதிக்கும் ஆசிரியர்களிடையே அனுபவமும் திறனும் வாய்ந்தவர்களை நியமித்துவிட்டு, ரேஞ்சு அதிகாரிகள் வெறும் மேற்பார்வை மட்டும் பார்த்துக்கொண்டால், எல்லாக் காரியங்களையும் ஆசிரியர்களே சுலபமாக நடத்திக் கொடுப்பார்கள். இது என் அனுபவத்தில் கண்ட உண்மை. சென்னை தென் தொகுதிக்கு ஸ்ரீ R. வெங்கடரமண ராவ் B. A. L. T. அவர்கள் ரேஞ்சு அதிகாரியாக இருந்தபோது மேலே காட்டியுள்ள திட்டங்களையெல்லாம் எங்களால் செயல்முறையில் நடத்த முடிந்தது நடத்தி வெற்றியும் கண்டுள்ளோம்.

# ஆசிரியர் உள்ளம்

சிகி.

## சட்டசபையில் ஆசிரியர்!

ஒவ்வொருவரும் ஜனாதிபதியாக வர வசதிகள் இருக்க வேண்டுமென காந்தியடிகள் சொல்லியிருக்கிறார் கள். குடியாட்சியில் ஒவ்வொரு வருக்கும் உரிமை யுண்டென்று ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் அல் லும் பகலும் சொல்லி வருகிறார்கள். அவ்வுரிமை எந்த முறையில் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிற தென்பதை யும் கூர்ந்து கவனிக்கவும் வேண்டும். ஒருவித உரிமையும் கொடுபடாது குடியாட்சியில் மக்களுக்கு உரிமை யுண்டென்று சொல்லிக் கொண்டே போதல் கேலிக்கூத்தாகும்.

சென்னை மேல் சபையில் ஆசிரி யர்களுக்கென சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதனை ஆசிரியர் உலகம் மகிழ்ச்சியுடன் வர வேற்குமென்பதில் ஐயமில்லை.

ஆனால் 'ஆசிரியர்' என்றால் விரிந்த மனப்பான்மையில் விவரித் துக்கொள்ளாது ஆரம்ப ஆசிரியர் களை ஒதுக்கித் தள்ளுவது நியாய மாகாது. ஒதுக்கப்பட்ட ஸ்தானங் களுக்கு செகண்டரிபள்ளி ஆசிரியர் கள்தான் அபேட்சகராக நிற்கவும், தேர்ந்தெடுத்து அனுப்பவும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அந்த வசதி, உரி மையில்லாதிருப்பதை ஆசிரியருலகம் எண்ணினால் வருந்தாமலிருக்க முடி யாது. குடியரசாட்சியில் ஆசிரிய சமூகத்தில் காலேஜ் ஆசிரியர், செகண்டரி பள்ளி ஆசிரியர், ஆரம்ப ஆசிரியர் என்று பிரித்தல் நியாயமா குமா?

குடியாட்சியில் சீரும் சிறப்பும், க்ஷேமமும் பெறுக கல்வி யறிவுதான் முதன்மையாக வேண்டும். அனை வருக்கும், வயது வந்தவர்களுக்கெல் லாம் வாக்குரிமை அளிக்கப்பட் டது. எழுதப் படிக்கத் தெரியாத வர்கள் நம் நாட்டில் ஏராளம். பால ருக்கும் முதியோருக்கும் கல்வி புகட்டவேண்டிய தவசியமென்று பேசப்பட்டு வருகிறது. இவ்வேலை கள் எவரால் செய்யப்படவேண்டு மென்று கூறத் தேவையில்லை. ஆரம்ப ஆசிரியர்கள்தான் அடிப் படைக் கல்விக்கு உழைக்கும் கல்வித் தொண்டர்கள்.

ஆதாரக் கல்வித் திட்டம் பள்ளிக் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கிற தென்று சொல்லப்பட்டு வருகிறது. ஆதாரக் கல்வித் திட்டம் நம் நாட் டுக்கு ஒரு புரட்சிகரமான திட்டம். அத்திட்டத்தின் மூலம் நம் நாடு நலம்பெற உழைக்க வேண்டியவர் கள் எவர்?

உழைப்பவர்கள்தான் அத்திட்டங் களைப்பற்றி நன்கு அறிவார்கள். அனுபவவாயிலாக அறிந்தவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள்தான். இதில் கருத்து இருவிதமிருக்க முடியாது. அவ்வாரம்ப ஆசிரியர்கள்தான் ஆரம் பக்கல்வி அபிவிருத்திக்கு ஆலோ சனை சொல்லி சீர்திருத்தம் செய்ய முடியும். வெறும் எட்டளவு ஞானம் படைத்தவர்களால் பிரமாதமாக ஒன் றும் செய்துவிட முடியாது. வெறும் புத்தகப்படிப்பில் பிரக்யாதி பெற்ற சிலரால் ஆரம்பக் கல்வித் திட்டம் தீட்டி அதை அமுலாக்கி, ஆரம்ப ஆசிரியர்களை ஒன்றும் கேளாதும், ஆரம்ப ஆசிரியர்களென்றால் ஒரு வித மனப்பான்மை கொண்டிருந்த லால்தான் வெள்ளையர் ஆட்சியில் ஆரம்பக் கல்வி ஆமை, வேகத்தில் சென்றது.

ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கு ஆரம்ப ஆசிரியர்களின் உழைப்பும், ஆலோசனைகளும் மிகவும் வேண்டும். எனவே மேல் சபையில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் எல்லா ஆசிரியர்களுக்கும் உரிமை கிடைப்பதுதான் நீதியாகும். ஆசிரியர் என்றால் காலேஜ், ஹைஸ்கூல், ஆரம்பப்பள்ளியில் போதிக்கிறவர்களென்ற விரிந்த மனப்பான்மையில் வியாக்யானம் கொள்ளல் வேண்டும். இதுதான் காலதேச வர்த்தமானத்திற்கு உகந்த காரியமாகும்.

மக்கள் அனைவரும் சமமென்று சட்டதிட்டங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் ஆசிரியர் என்றால் ஆரம்ப ஆசிரியர்களைத் தவிர மற்ற ஆசிரியர்களென்று பொருள் கூறுதல் நகைப்பிற் கிடமாகும்! இது விஷயத்தில் அரசாங்கம் கவனித்து தக்கது செய்யுமென்று நம்புகிறோம்.

* * *

## மகிழ்ச்சி.

ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு 35—2—65 சம்பளத் திட்டம் வகுத்துவிட்டது சென்னை கார்ப்பரேஷன். அது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இத்துடன் அங்குள்ள ஆசிரியர்களுக்கு இதரர்களைப்போல் பஞ்சப்படியும் கொடுபட்டு வருகிறது. மேலும் வீட்டு வாடகை அலவன்ஸும், பென்ஷன் சலுகையும் கிடைக்கின்றன. அதே சென்னை கார்ப்பரேஷன் பள்ளிக்குப் பக்கத்திலுள்ள எய்டெட் பள்ளிக்கூடத்திலுள்ள ஆசிரியர்களுக்கு 30–1–45 சம்பளத் திட்டமும் பஞ்சப் படியுந்தான். இவ்வாசிரியர்களுக்கு வீட்டு வாடகையுமில்லை, பென்ஷனுமில்லை.

ஆனால் ஆசிரியர்கள் எந்த ஸ்தாபனத்தின்கீழிருந்தாலும் ஒரே சட்டம், ஒரே கொள்கையுடன் உழைக்க வேண்டியவர்கள். பரிக்ஷாதிகாரிகளும் ஒன்றுதான். எல்லாம் ஒன்று பொருளாதாரத்தில் மாத்திரம் வேறு! எய்டெட் பள்ளிகளைப்பற்றி வானமளாவப் பேசப்பட்டு வருகிறது. அந்தப் பேச்சைக் கேட்டு அவ்வாசிரியர்கள் குதூகலம்கொண்டு நாட்டுக்கு உழைத்து நாடு கல்வியில் முன்னேறவேண்டும்!

* * *

## மெயிண்டினன்ஸ் கிராண்டு ரகஸ்யம்!

எய்டெட் பள்ளிகளுக்கு இப்போது கொடுபட்டுவருவது டீச்சிங் கிராண்டும், மெயிண்டினஸ் கிராண்டும். இதில் மெயின்டினஸ் கிராண்டு கொடுபடுவதின் கொள்கை என்ன? பள்ளி பராமரிப்புக்கு எந்த செலவினங்களை அதிகாரிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். எந்தசெலவினங்களை ஒதுக்கித் தள்ளுகிறார்களென்பது பரம ரகஸ்யமாக இருக்கிறது! கடவுளுக்குக்கூடத் தெரியாதுபோலும்! இம்மாதிரி கண்ணையும் கையையும் மூடிக்கொண்டு மெயின்டினஸ் கிராண்டு கொடுத்துவிட்டு அப்பீல் செய்தால் கவனிக்கப்படுமென்று சொல்லுவது கருணை மேலிட்டா அல்லது கண்துடைப்பு வேலையா என்பது பொறுத்துப் பார்த்து பேச வேண்டிய விஷயம்! மெயின்டினஸ் கிராண்டு இம்மாதிரி கொடுபட்டு வந்தால் எய்டெட் பாடசாலைக்குத் தலைவலிதான்! மக்களாட்சியில் பள்ளித் திறப்பு விழா நடக்காமற் போனாலும் மூடு விழா நடக்கும்! அதிகாரிகளுக்கென்ன? பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தால் அலுவல்கள் அதிகமிராது.

# முதலில்-முதியோர் கல்வி

(மு. தியாகராஜன், இளைஞர் நல்லற மன்றம், சென்னை)

முதன் முதலாக அமெரிக்காவில் தான் முதியோர் கல்வி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 115 ஆண்டுகட்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்ட இவ்வியக்கம் அங்கு நற்பயனை அளித்து வருகின்றது. படித்தவர் கள் அதிகமாக உள்ள நாடுதான் முன்னணியில் நிற்க முடியும். அந் நாட்டில்தான் சட்டத்திற்கும் ஒழுங் கிற்கும் மக்கள் உட்பட்டு நடப்பர். அங்குதான் மக்கள் பொருளாதாரத் துறையிலும் சமூகத் துறையிலும் முன்னேறி இருப்பர். நல் வாழ்வும் வாழ்வர்.

2. முதியோர் கல்வியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று எழுத்தறிவிப்பு, மற்றொன்று முதி யோர் கல்வி; எழுத்தறிவிப்பு இயக் கத்தை நாட்டில் பாவச்செய்ய ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் திட்டமே போதுமானது. முதி யோர் கல்வி பின்னர் பரவச் செய் தற்கு குறைந்தது ஐந்தாண்டுகளா வது பிடிக்கும். திட்டம் சிறந்த முறையில் அமையுமானல்.

3. நம் நாட்டைப் பொறுத்த வரையில் எழுதப் படிக்கத் தெரியா தார் தொகை 100-க்கு 85-க்கு அதி கம். குடியரசு பெற்ற நாட்டில் மக்கள் அனைவரும் படித்திருத்தல் வேண்டும். இன்றேல் தவரான தலை வர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடும். இப் பொழுது உடனடியாக நாம் செய்ய வேண்டுவது — எழுத்தறிவிப்பு. இவ் வியக்கம் மிகத் தீவிரமாகப் பரவுதல் வேண்டும். சர்க்கார் உண்மையில் முனைந்து நல்லதொரு திட்டத்தை, தயார் செய்து அமுலுக்குக்கொண்டு வருவார்களானல் ஓராண்டிலேயே இதைச் செய்து முடிக்க முடியும்.

4. நம் நாட்டிலே "ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா," "இளமையிற் கல்" என்பனபோன்ற பழமொழிகள் பல உண்டு. ஆனல் 50 வயது உடைய முதியவர் 18 வயது இளைஞரைப்போல நன்கு கற்க முடியும். 'வயது ஒரு இடைஞ் சல் அல்ல; சந்தர்ப்பமும் விருப்ப மும்தான் இடைஞ்சலாக இருக்கின் றன', என்று எட்வர்ட் அல். தாண் டிக் என்னும் மனோதத்துவ சாஸ் திரி தமது விஞ்ஞான ஆராய்ச்சி யால் 1928ல் நிரூபித்துக் காட்டி யிருக்கிறார். அமெரிக்காவில் நடுத் தர வயதுக்கு மேற்பட்டவர்கள் கோடிக்கணக்கில் முதியோர் பள்ளி களில் சேர்ந்து படிக்கின்றனர். அப் படியிருக்க, நம் நாட்டில் இத்திட் டம் வெற்றி பெருது போகாது. "முதியோர் ஒருக்காலும் முன் னேற முடியாது, என்று சொல்லிக் கொண்டிருந்த அமெரிக்காவில் இன்று "படித்தற்கு காலங் கடந்து விடவில்லை" என்று சொல்லுகின்ற னர். எனவே நம் நாட்டு நிலைமை யை நாம் சற்று ஆராய்வோம்.

5. இங்கு பொதுவாகக் கல்வி யைப் பற்றியும் சிறப்பாக முதி யோர்க் கல்வியைப் பற்றியும் எல்லா மேடைகளிலும் பேசக் காண்கிறோம். இங்கு நாம் ஆரம்பக் கல்வியை அலட்சியம் செய்துவிடக்கூடாது. இன்றைய குழந்தைகள்தான் வருங்கால முதி யோர்கள். ஆரம்ப இலவசக் கட் டாயக் கல்வியில் நாம் கவனம் செலுத்தாது போவோமேயானல் மீண்டும் நாட்டிற்கு பெருந் தவ றிழைத்தவர்களாவோம்.

6. முதியோர் கல்விக்காக நம் நாட்டில் சிறந்த பள்ளிகள் கிடையாது. ஏதோ பெயரளவில் இருக்கின்ற பள்ளிகளுக்குத் தரப்படும் சன்மானமும் போதாது. போதிய பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் கிடையாது. இவற்றை எல்லாம் சீர் திருத்த நம் வசம் சரியான புள்ளி விவரங்கள் கிடையாது. முதியோர் கல்விக்கான தனி இலாகாக்கள் இல்லை. குழந்தைகளின் கல்வி வேறு. முதியோர்க்கு தரப்படும் கல்வி வேறு. முதியோர் அனுபவத்தால் எதையும் அறிந்து கொள்ளக்கூடியவர்கள். குழந்தைகளுக்கு சொல்லி கொடுப்பதை போன்று முதியோர்க்கு கல்வி அளிப்பது முடியாது. முதியோர் கல்விக்காக பாடுபடும்ஸ்தாபனங்களிடையேஎந்த வித பாரபட்சமும் காட்டக்கூடாது. தற்போது சென்னை நகரில் மாதத்திற்கு ரூபாய் பதினைந்தும் கிராமங்களில் ரூபாய் எட்டும் முதியோர் கல்வி ஸ்தாபனங்களுக்குச் சர்க்கார் அளித்து வருகின்றனர். ரூபாய் எட்டில் எந்த ஆசிரியரைக் கொண்டு எவ்வாறு கல்வி கற்பிக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்? இத்தகைய பள்ளிகளிலிருந்து எவ்விதமான பயனை நாம் எதிர் பார்க்க முடியும்? சர்க்கார் காரியாலயங்களில் வேண்டுமானால் எட்டளவில் பயனைக் காணலாமே யொழிய உண்மைப்பயன் ஒன்றும் கிடையாது என்று துணிந்து கூறலாம். மேலும் இங்கு முதியோர்க்கு அளிக்கப்படும் கல்வி எங்கும் ஒன்றுபோல் அமையவில்லை. சரியான பாடதிட்டங்கள் கிடையா. அவரவர் தொழிலுக்கேற்ற கல்விபெற முடிவதில்லை. எட்டுக் கல்வியோடு தொழில் நுணுக்கக்கல்வியும் முதியோர்க்கு இன்றியமையாதது. நம் நாட்டில் பெண்கள் புறக்கணிக்கப் படுகின்றனர். அவர்கட்கும் கல்வி இன்றியமையாதது. நம் நாட்டில் பெரும்பாலான பெண்மக்கள் தங்கள் காலத்தை வீணே கழிக்கின்றனர். அப்படியே வைத்தியவிடுதிகளிலும்(Hospitals) சிறைச்சாலைகளிலும் (Jails) உள்ள மக்களும் அவர்கள்கூட தங்கள் அரிய காலத்தை வீணே கழித்தல் கூடாது. வயது வந்த அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட வேண்டிய இன்றைய நாளில் வீணே மக்கள் தங்கள் காலத்தை கடத்தல் கூடாது. கற்றல் இன்றியமைதாதது என்பதை அனைவரும் உணரவேண்டும். அதற்கான பிரசாரத்தை உடனே தொடக்கவேண்டும்.

7. நம் நாட்டு பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். இவர்களில் 100-க்கு 75 பேர் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எழுத்தறிவித்த பின் விவசாய வகுப்புகளைத் தொடங்க வேண்டும். இதுபோன்று சிறுவர் பள்ளிகளிலும் இப்பொழுதிருந்தே விவசாயத்தைப் பற்றி கற்றுக்கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் உண்மையில் உற்பத்தி பெருகும். சர்க்கார் விவசாய அதிகாரிகள் அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று புதுமாதிரியான பண்டங்களை எவ்வாறு பயிர் செய்வது, மார்க்கெட்டில் அவைகளைக் கூட்டுறவு முறையில் எவ்வாறு விற்பனை செய்வது என்பன போன்றவற்றை மக்களுக்குச் சொல்லித்தால் வேண்டும். காய்கறி பழவகைகளை பயிர் செய்வதால் ஏற்படும் நன்மைகள், பலவித பூச்சிகளினின்றும் பயிர்வகைகளைக் காப்பாற்றல் போன்ற பொருள்பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டும். கிராமந்தோறும் நூல் நிலையங்களை நிறுவி இலவசமாக நூல்களை வழங்க வேண்டும்.

நூல் நிலைய அதிகாரி நூல் நிலையத்தில் படிப்பவர்களையும் புத்தகம் எடுத்துச் செல்பவர்களையும் தனித் தனியாக நன்கு கவனித்து அவரவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். நூல் நிலையத்தில் நூல்களைப் படித்துவிட்டு அவர்கள் தாங்களாகவே நூல்கள் எழுதப் பழகிக்கொள்ளவேண்டும். பிரஜைத் தன்மை (Citizen ship) அடைவதற்கான தனி வகுப்புகள் நடத்தப் படல் வேண்டும். இத்துடன் நாகரிகக் கல்வியும் இன்றியமையாதது கிராமங்களில் ரேடியோக்கள் பொறுத்தப்பட்டு இலவசமாகக்கல்வி அளிக்கவேண்டும் கிராமங்களைக் கொண்டே நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும். பொருளாதாரப் பேச்சுக்கள், நாடகங்கள் முதலியன மக்களுக்குச் சிறந்த பயனைத் தரும்.

8. ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் மக்களுக்கும் கல்வி கற்க வசதிகள் செய்து தரவேண்டும். இங்கு மக்கள் ஒரு வாரத்தில் தாங்கள் படிப்பதை அடுத்த மூன்று வாரங்களில் செயல் முறையில் செய்து பழகவேண்டும். இந்த முறையில் தொழிலுக்கேற்ப கல்வி அமையவேண்டும். விட்டுப் போன உயர்தர, நடுத்தர பள்ளிப் படிப்பை முடித்துக்கொள்ள இவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும்.

9. ஆஸ்பத்திரிகளில் உடம்பு தேறும் தருவாயில் உள்ளவர்களுக்கு நல்ல நூல்களை வழங்கி படிக்கச் செய்யவேண்டும் எழுந்து நடக்க முடியாதவர்களுக்கு வண்டிகளில் (Dollys) எடுத்துச் சென்று புத்தகங்களை வழங்கவேண்டும்.

10. சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கும் படிக்க வசதி செய்து தருவது, அவர்களுடைய மன விசாரத்தைப் போக்கக்கூடும். திருத்தமும் பெறுவர்.

11. பெண் மக்களுக்கு வீட்டை நடத்தும் முறைகளைப்பற்றிய அறிக்கைகளை அச்சடித்து இலவசமாக வழங்கவேண்டும். சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தவும் சத்துள்ள பொருள்களைச் சமைக்கவும், பழம், காய்கறி, மாமிசம் இவைகளைக் கெடாது காப்பாற்றவும் கற்றுக் கொடுக்கவேண்டும். சித்திரம் வரைதல், கம்பளம் நெய்தல், குழந்தைகளைக் காப்பாற்றல் போன்ற தொழில்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

12. ஆசிரியரும் பெற்றோரும் சேர்ந்து படிக்கக்கூடிய வகுப்புகளை இங்கு ஏற்பாடு செய்யவேண்டும். குழந்தைகள் வளர்ப்பைப்பற்றி இருதாரப்பினரும் தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவேண்டும். இதனால் வருங்காலமுதியோர் வாழ்க்கை செம்மையுறும்.

13. ஐரோப்பாவிலேயே மிகச் சிறிய தேசமாகிய ஸ்வீடனிலே 8000க்கு அதிகமான கல்வி நிலையங்களைத் தொழிற் சங்கங்களே நிர்வகிக்கின்றன. ஆனல் இங்குள்ள தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தம் தவிர வேறு எதையும் செய்வதாகத் தெரியவில்லை. இந்நாட்டிற்கு சுதந்திரம் வந்து 3 ஆண்டுகள் ஆகியும் எழுத்தறிவிப்பு இயக்கம் இன்னும் ஆரம்ப நிலையில் இருப்பது வெட்கக் கேடான ஒரு செய்தியாகும். எனவே, சர்க்கார் இந்த புனிதமான காரியத்தை அவர்களைக் கொண்டு திட்டங்கள் தீட்டி உடனடியாகச் செய்து முடிப்பார்களா? பார்ப்போம்.

# முதியோர்க் கல்வியும் பேசும் படமும்

K. S. சந்திரசேகரன் M.A.,L.T. விவேகானந்தர்காலேஜ், மயிலாப்பூர்

சுதந்திர இந்திய நாட்டில் வயது வந்த எல்லாப் பிரஜைகளுக்கும் வோட்டுரிமை அளிக்கப் பெற்றிருக்கிறது. இந்த வோட்டுரிமையினுல் நமது பொறுப்பு அதிகமாகிறது நம்மை ஆளத் தகுதியானவர்கள் யார் என்பதை நிர்ணயிக்கவேண்டிய பெரிய பொறுப்பு நம்முடையது. அந்தக் கடமையைச் சரிவர நிறைவேற்ற கல்வியறிவு மிகவும் அவசியம். நூற்றுக்குப் பத்து சதவிகிதம் கூடக் கல்வியறிவு இல்லாத நமது நாட்டிற்கு முதியோர் வோட்டுரிமை அவசியம்தானு, அதில் எவ்வளவு ஆபத்து இருக்கிறது என்றெல்லாம் பாபு ராஜேந்திர பிரஸாத் போன்ற தலைவர்கள் கவலைப்படுகிருர்கள்.

என்ருலும், முன்வைத்த காலைப்பின்வைகக முடியாது. கொடுத்த வோட்டுரிமையை மறுபடியும் மறுப்பது இயலாத காரியம். நூற்றுக்குப் பத்து சதவிகிதம்தான் கல்வியறிவு உள்ளது என்னும் நிலைமையை மேலும் நீடிக்க விடக்கூடாது. முதியோர் கல்வியைப் பரப்புவதுதான் இன்றைய முதல் தேவை. பொது ஓட்டுரிமைக்கு கட்டாயப் பொதுக்கல்வி முதற்படியாகும்.

முதியோர் கல்வித் திட்டத்தில் பேசும் படத்திற்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. முதியோர் கல்வி கற்க, பள்ளிக்கூடங்களுக்கு சிறு பிள்ளைகளைப்போல் போவதென்பது நடக்காத காரியம். மேலும் 'விளையும் பயிர் முளையிலே' என்னும் மூதுரைக்கேற்ப, வயது சென்றவர்களுக்குக் கல்வி கற்பிப்பது மிகவும் கடினம் ஆகும். ஐந்தில் வளையாததை, ஐம்பதில் வளைப்பது சிரமம்தான். இந்த சிரமத்தை மட்டுப்படுத்தச் சலனப் படங்கள் உதவும்.

இன்றைய உலகில் சலனப் படத் தொழில் பிரம்மாண்டமாக வளர்ந்து விட்டது. இந்தியா இந்தத் தொழிலில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. ஆயிரம் பதினுயிரக் கணக்கில் மேற்படி தொழிலில் மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர். லட்சக்கணக்கில் ஜனங்கள் படம் பார்க்கின்றனர். ஆயினும், பேசும் படங்கள் பெரும்பாலும் பொழுதுபோக்குக்காகவே பயன்படுகின்றன.

எனவே முதியோர் கல்வி எவ்வளவு அவசியமோ, அதைப் போன்றே சலனப்படத் தொழிலைக் கல்வியறிவைப் பரப்புவதற்குப் பயன்படுத்துவதும் இன்றியமையாததாகும். 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்று கூறு

வது போல், பேசும் படங்கள் மூலம் முதியோர் கல்வியைப் பரப்புவதனுல் இவ்விரு காரியங் களையும் சாதிக்கலாம்.

முதியோர் கல்வியைச் சலனப் படங்களால் எப்படி பரப்புவது என்பதே நமது பிரச்னை.

சலனப் படங்களில் பொழுது போக்குப் படங்களை விட்டுவிட்டு கல்விப் படங்கள், பிரசாரப் படங்கள், செய்திப் படங்கள், டாக்குமெண்டரி என்னும் வாழ்க்கை வரலாற்றுப் படங்கள். முதலியவற்றை முதியோர் கல்விக்காக உபயோகப் படுத்தலாம்.

"ஒரு விஷயத்தை நூறு பக்கங்களில் சொல்லி விளங்கவைப்பதைவிட நூறு அடி சலனப் படத்தில் விளங்க வைப்பது சுலபம் என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிருர். ஆகவே, முதியவர்கள் நூறு பக்கங்களைப் படித்து அறியக் கூடியவற்றை நூறு அடி நீளமுள்ள கல்விப் படங்கள் மூலம் சாதிப்பது அனுபவசாத்தியமானது. உதாரணமாக, மத்திய சர்க்காரின் செய்தி இலாகா பிலிம்ஸ் பிரிவினர் சமீபத்தில் "தென்னை மரம்" (Tree of wealth) என்னும் ஒரு படத்தை வெளியிட்டிருந்தார்கள். அந்தப் படத்தில் தென்னை மரத்தின் பல்வேறு பகுதிகளால் நமக்கு என்னென்ன பயன்கள் ஏற்படுகின்றன என்பதைச் சுமார் அரை மணி நேரத்தில் அற்புதமாக விளக்கி யிருக்கிருர்கள் இதே விஷயத்தையே ஒரு புத்தகத்தில் படித்தறிய வேண்டுமானுல், குறைந்தது 100 பக்கங்களாவது வேண்டி யிருக்கும். அதைப்படித்தறியப் பல நாட்களும் தேவைப்படும், மேலும், ஒரு விஷயத்தைக் கண்ணெதிரிலேயே காணும்போது நாம் அதை எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது. தென்னை மரத்திலிருந்து அகப்பை செய்கிருர்கள் என்பதைப் புத்தகத்திலிருந்து அறிவதைவிட, நேரே படத்தில் காட்டும் போது எளிதில் புரிந்துகொள்வதுடன், நம் மனதிலும் சுலபமாய்ப் படிந்துவிடுகிறது.

இதே போன்ற, "கண்" 'காது' முதலியவற்றைப் பற்றியும் கல்விப் படங்கள் மேல் நாட்டிலிருந்து வந்திருக்கின்றன.

கல்விப் படங்கள் மூலம் அநேக விஷயங்களைக் குறைந்த நேரத்தில், விளங்க வைக்கலாம். நமது வாழ்க்கைக்குத் தேவையான எல்லா விஷயங்களைக் குறித்தும் சிறுசிறு கல்விப் படங்கள் வெளியிடுவதும் அரசாங்கத்தின் கடமையாகும். "வோட்டு" என்முல் என்ன? அதை நாம் எப்படி உபயோகிக்கவேண்டும். நம்மால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் செய்வது என்ன, சட்ட சபைகள், கட்சிகள், மந்திரிகள் இவர்கள் யாவரும் நாட்டுக்காகச் செய்வது என்ன—இதைப் போன்ற அநேகம் விஷயங்களைப் படங்கள் மூலம் கல்வியற்றவர்களுக்கு விளக்கவேண்டும். முக்

கியமாகக் கிராமங்களில் இம்மாதிரியான கல்விப் படங்களை இலவசமாகக் காண்பிக்கவேண்டும். மக்களுக்கு அவர்களுடைய கடமைகளை அறிவுறுத்துவதில் கல்விப்படங்களைப் பயன்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக கல்விப் படங்கள் மூலம் பிரஜைகளின் கடமைகளை விளக்கலாம். அன்றாட வாழ்க்கையில் நாம் அனுசரிக்க வேண்டிய விதிகள். தேசத்திற்காக நாம் செய்யவேண்டிய காரியங்கள் முதலியவற்றைக் கற்பிக்கலாம். ஒரு விதியைக் கடந்து செல்லும் போது இரண்டு பக்கங்களிலும் பார்த்துக்கொண்டு செல்வது நல்லது என்பதை ஒரு படத்தின் மூலம் எளிதில் பதிய வைக்கலாம். அஜாக்கிரதையாகச் சென்ற ஒருவன் எப்படி ஒரு மோட்டாரினுல் மோதப்பட்டு இறந்தான் என்று படமெடுத்துக் காண்பித்தால் போதும்; நம் இலட்சியம் நிறைவேறும். இதைப்போல் தான் மற்ற விஷயங்களையும் சிறு சிறு கதை வடிவத்தில் தயாரித்தால் மக்கள் புரிந்து கொள்வது சாத்தியமாகும்.

பிறகு வருகின்ற செய்திப் படங்களும்; டாக்குமென்டரியும் செய்திப் படங்கள் மூலம் நம் நாட்டிலும், இதர தேசங்களிலும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளை இருந்த இடத்திலிருந்தே பார்க்க முடிகிறது. இதனுல் நம் அறிவு விசாலமடைகிறது. அங்கோ ஒரு தேசத்தில் ஒரு தலைவரை மக்கள் ஒழுங்கான முறையில் வரவேற்பதைக் காட்டும் படத்தைப்பார்ப்பதால் நமக்கும் அந்த மக்களைப்போல் ஒழுங்காக நடந்து கொள்ளத் தோன்றுவது இயற்கை. 'வாலிப விழா' (Festival of Youth) என்ற ருஷ்யப்படம் இதற்குத் தகுந்த ஓர் உதாரணமாகும். மற்றும் தலைவர்களைப் பற்றிய வாழ்க்கைப் படங்களும் மக்களின் அறிவை அபிவிருத்தி செய்ய உதவுகின்றன. பண்டித நேருவின் வாழ்க்கையைப் பற்றி அறிய விரும்புபவர்களுக்குப் படிக்கச் சக்தியில்லா விட்டால், அவரைப் பற்றியப் படத்தைப் பார்ப்பது போதும். மகாத்மா காந்தியைப் பற்றிய டாக்குமெண்டரி ஒரு சிறந்தபடமாகும். இதேபோன்ற அநேகம் டாக்குமெண்டரிகள் வெளியிடப்படவேண்டும். மேல் நாட்டில் "கியூரி அம்மையார்" (Madam qurie) "சிறிய பிட்" ("young Mr. pitt") போன்ற படங்களின் மூலம், மேற்படி அறிஞர்களின் பெருமையைச் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகிறார்கள். கல்வி யறிவு இல்லாதவர்களும் இதைப்போன்ற படங்களைப் பார்ப்பதன் மூலம் தம் அறிவை அபிவிருத்தி செய்துகொள்ள முடிகிறது.

பிரசாரப் படங்கள் மூலம் நமது கலாசாரத்தைப்பற்றி எல்லோரும் அறிந்து கொள்ளச் செய்யலாம். நமது புராதனக் கோயில்கள், சிற்ப சாலைகள், மற்றும் பல அற்புதங்கள் முதலிய

## கல்வி ஸ்தாபனங்களின் சொத்துக்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளச் சட்டம்

Act No. 48 of 1949

25-1-50—சர்க்கார் கஜட்

தனிப்பட்ட நபர்கள், அல்லது ஸ்தாபனங்கள் அல்லது முனிசிபாலிடி, ஜில்லாபோர்ட், பஞ்சாயத்துப்போர்ட் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களால் நிர்வாகம் செய்யப்படும் ஸ்கூல்கள், காலேஜ்கள், முதலிய கல்வி ஸ்தாபனங்கள் சர்க்கார் அங்கீகாரத்தின் பேரில்தான் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த கல்வி ஸ்தாபனங்களை நிர்வாகம் செய்பவர்கள் சரிவர அந்த ஸ்தாபனங்களை நடத்தாமல் அதற்காக ஏற்பட்டிருக்கும் விதிகளை மீறினல் சர்க்காருக்கு அங்கீகாரத்தை ரத்து செய்ய உரிமையுண்டு அவ்விதம் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டவுடன் அந்தப் பள்ளிக்கூடங்களும் காலேஜ்களும் மூடப்படும் அதில் கல்வி கற்கும் மாணவர்கள் படிப்பை நிறுத்தும்படி நேரிடும். படிப்பு

---

வற்றைச் சிறிய சிறிய படங்கள் மூலம் காட்டலாம். தாஜ்மஹால் எல்லோரா, அஜந்தா, மதுரை, தஞ்சாவூர் கோயில்கள், செஞ்சிக் கோட்டை, ராஜஸ்தானக் கோட்டைகள் முதலிய சரித்திர காலச் சிருஷ்டிகளைப் படங்கள் மூலம் காட்டினல், அவற்றைப் பற்றிப் படித்தறிவதைவிட எளிதில் உணர்ந்து கொள்ளலாம்; செலவும் குறைவு. ஒவ்வொருவரும் ஆக்ராவுக்குச் சென்று தாஜ் மஹாலைப் பார்ப்பது இயலாத காரியம். அதையே ஒரு படமாக எடுத்து ஆயிரக்கணக்கானவர்களுக்குக் காண்பிப்பதால் நமது உயர்ந்த கலைகளைப்பற்றி அனைவரும் உணரமுடிகிறது. தாஜ் மஹால் போன்ற கலாசிருஷ்டிகள் நமது நாட்டில் அநேகம் இருக்கின்றன. அவற்றைப்பற்றி பிரசாரம் செய்யச் சலனப்படங்கள் உதவும்.

அறிவு விசாலமடையக் கல்வி மட்டும் போதாது. கேள்வியும், காட்சியும் மிகவும் அவசியமாகும். வானெலி மூலம் நமது கேள்வி ஞானத்தை அபிவிருத்தி செய்யலாம். பேசும் படங்கள் மூலம் நமது அறிவு விசாலமடையச் செய்யலாம். முதியோர் கல்வி திட்டத்தில் மட்டுமின்றி பாலர் கல்வித் திட்டத்திலும் பேசும் படம் ஓர் இன்றியமையாத சாதனமாகப் பயன்படும். அதற்கு அரசாங்கத்தின் உதவி அவசியம். தனிப்பட்ட பல முதலாளிகள் முதியோர் கல்விக்காக அதிகம் செய்துவிட முடியாது. கல்வி இலாகாவும், விளம்பர இலாகாவும் சேர்ந்து ஒரு திட்டத்தை உருவாக்கி, சலனப் படங்கள் மூலம் முதியோர்க் கல்வியை வளர்ப்பதே நமது இன்றைய தேவை.

வருடம் முடியும் தினத்திற்கு முன் எக்காரணத்தைக்கொண்டும் கல்வி ஸ்தாபனங்கள் மூடப்பட்டாலும் மாணவர்களுக்கு அதே கஷ்டம்தான் நேரிடும். ஆகையால் இவ்விதம் சர்க்கார் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டாலும், அல்லது படிப்பு வருடம் முடியு முன்பே எந்தப் பள்ளிக்கூடம் மூடப்பட்டாலும், உடனே (அல்லது மூன்று மாதங்களுக்குள்) அப்பள்ளிக்கூடம் அல்லது காலேஜின் எல்லாச் சொத்துக்களையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு அக்கல்வி ஸ்தாபனத்தை நடத்த ஏற்பாடு செய்யலாம். அந்தக் கல்வி ஸ்தாபனத்திற்குச் சொந்தமான எல்லா ஸ்தாவர ஜங்கம சொத்துக்களையும், மேஜை, நாற்காலி, பெஞ்சு, போர்டு முதலிய தளவாட சாமான்களையும், ரிஜிஸ்டர், படம் முதலிய எவ்வகைச் சொத்துக்களையும் அத்துடன் சேர்ந்த ஹாஸ்டல், விளையாட்டு மைதானங்கள் எல்லாவற்றையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு நிர்வாகம் செய்யலாம். எந்தப் படிப்பு வருடத்தில் இவ்விதம் அதன் நிர்வாகத்தை மேற்கொள்கின்றனரோ (அதற்கு அடுத்த) அந்தப் படிப்பு வருடம் முடிய இவ்விதம் சர்க்காரே அச் சொத்துக்களை வைத்துக்கொள்ளலாம். தேவையானல் இன்னும் ஒரு வருடமும் வைத்துக்கொள்ளலாம். கல்வி ஸ்தாபனத்தின் கட்டிடங்களின் சொந்தக்காரருக்குச் சர்க்காரே வாடகைக் கொடுப்பார்கள். வாடகை யாருக்குக் கொடுப்பது என்பதில் தகராறு ஏற்பட்டால் ஜில்லா கலெக்டர் அதைத் தீர்மானிப்பார். அதன்பேரில் ஜில்லா ஜட்ஜுக்கு அப்பீல் உண்டு. இதுதான் முடிவான தீர்ப்பு. ஜங்கம சொத்துக்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்படும். இதை யாருக்குக் கொடுப்பது என்ற விஷயமாய் சர்க்கார் விதிகள் செய்யலாம். சர்க்கார் இவ்விதம் சொத்துக்களை எடுத்துக்கொள்வதை யார் தடுத்தாலும் அவர்களே அதை நீக்கிச் சொத்துக்களை எடுத்துக்கொள்ளச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. இச் சட்டப்படி அவர்கள் செய்யும் எந்த உத்தரவை மீறுவதும் குற்றமாகும். ஆறுமாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூபா 1,000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இச் சட்டத்தில் சர்க்காருக்குள்ள அதிகாரங்களை வேறு ஒரு அதிகாரி செய்யும்படி மாற்றச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

---

## சமூக சேவா பயிற்சிச் சாலைகள்

தற்போது, அரசாங்கம் பல்வேறு வகையில் சமூக சேவை செய்த போதிலும் அவற்றையெல்லாம் ஒன்றுசேர்க்க ஒரு மந்திரியின் மேற்பார்வையில் வைப்பது உசிதம். தற்போதய நிலையில் ஒரு மந்திரியை ஏற்பட முடியாமற்போயினும். ஒரு தனி இலாகாவாவது ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் சமூக சேவா ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கும் வித்யா சாலைகள் ஏற்படுத்தப்படவேண்டிய அவசியத்தை சர்க்கார் உடனடியாக உணர்ந்து அதற்கு ஆவன செய்வார்களாக.

# மூலாதாரக் கல்வியே முனிவரருளிய
# உபநிஷத உண்மைகள்
## தைத்திரீய உபநிஷதம்
### "ஆசி"

### I. சிக்ஷாவல்லி—பயிற்றுமுறை.

வ்யாஹ்ருதி யுபாஸனையும் பயனும்

வ்யாஹ்ருதிகளைக் கூறல்:

பூ: புவ: ஸுவ: என்ற இவையன்றோ மூன்று வ்யாஹ்ருதிகள்! அவற்றுள்ன்றோ இந்த நான்காவதை, மாஹாசமஸ்யர் நன்கு கண்டறிந்தார்—மஹ: என்பதை! அது பிரம்மம்; அது ஆன்மா; (அதன்) உறுப்புகள் மற்ற தேவதைகள்.

வ்யாஹ்ருதிகளை உலகுகளாக உபாஸனை கூறல்:

பூ: என்பதோ இவ்வுலகம்; புவ: என்றது அந்தரிக்ஷம்; ஸுவ: என்றது அவ்வுலகம்; மஹ: என்றது ஆதவன்; ஆதவனுலன்றோ எல்லா வுலகங்களும் பெருமையுறுகின்றன!

தேவவொளிகளாக உபாஸனை கூறல்:

பூ: என்பதோ அக்னி; புவ: என்றது வாயு; ஸுவ: என்றது ஆதவன்; மஹ: என்றது சந்திரன்; சந்திரனுலன்றோ எல்லா ஒளிகளும் பெருமையுறுகின்றன!

வேதங்களாக உபாஸனை கூறல்:

பூ: என்பதோ ரிக்குகள்; புவ: என்றது ஸாமங்கள்; ஸுவ: என்றது யஜுஸ்ஸுகள்; மஹ: என்றது பிரம்மம்; பிரம்மத்தாலன்றோ எல்லா வேதங்களும் பெருமையுறுகின்றன!

உயிர்வன்மை (பிராணன்)களாக உபாஸனை கூறல்:

பூ: என்பதோ பிராணன்; புவ: என்றது அபானன்; ஸுவ: என்றது வியானன்; மஹ: என்றது உணவு; உணவாலன்றோ எல்லா வுயிர்வன்மைகளும் பெருமையுறுகின்றன!

நான்கு வ்யாஹ்ருதிகளின் இந்நால்வகை யுபாஸனைப் பயன்:

அந்த இந்நான்குமன்றோ நால்வகையாகி, நாநான்கு வ்யாஹ்ருதிகள (ஆகின்றன)! அவற்றை எவன் அறிவனே, அவன் பிரம்மத்தை யறிகின்றான்; எல்லாத் தேவர்களும் அவனுக்குக் கப்பங்கொணர்கின்றனர்.

[நான்காவது அனுவாகத்தில், அறிவும் திருவும் மறைநெறியும் சீருடன் அமையப்பெற்ற சூழ் நிலையே மூலாதாரக் கல்வியின் நோக்கம் முழுதும் பயனுறுதற்கு எற்றதென்று உணர்த்தி, அவ்வகைச் சூழ்நிலை நிலவுவதற்

கான உபாயமாக ஓங்கார வடிவில் பரம்பொருளை யுபாஸனை செய்யவேண்டு மென்று ஜப ஹோமங்களுடன் கூடிய வழிபாட்டு முறையுங் கூறப்பெற் றது. இந்த ஐந்தாவது அனுவாகத்தில் ஓங்காரத்தின் விளக்கச் சொற்க ளாக இலங்குகின்ற வ்யாஹ்ருதிகளைக் கொண்டு உபாஸனை விளக்கப் பெறுகிறது.

## வ்யாஹ்ருதிகளைக் கூறல்:

வ்யாஹ்ருதி என்ற சொல் சிறப்புடன் 'கூறப்பெறுவது' 'விளக்கம்' என்று பொருள்படும். வேள்விகள் பலவற்றிலும் ஓதப்பெற்று சிறந்து விளங்குவதால் பூ:, புவ:, ஸுவ: என்ற மூன்று சொற்களும் வ்யாஹ்ருதி கள் எனப்படுகின்றன. அன்றி, ஓங்காரத்தின் முதல் விளக்கமாக இந்த வ்யாஹ்ருதிகள் அறியப்படுகின்றன. ஓங்கார உபாஸனையால் உலகிற்கு மறைகளை ஈன்ற பிரம்மா என்ற ரிஷி அம்மறைகளின் ஸாரம் யாதெனத் துருவிக் காண்கையில் மூன்று வ்யாஹ்ருதிகளையே மூன்று வேதங்களின் ஸாரமாகவும், அவற்றின் ஸாரமாக ஓங்காரத்தையும், அதனைப் பரம்பொரு ளின் ஒலி வடிவாகவும் அறிந்தாரெனக் கூறப்பட்டுள்ளது. எனினும், வ்யாஹ்ருதிகள் எழுவகைப்படும். மஹ:, ஜன:, தப:, ஸத்யம் என்பனவே மற்ற நான்காகும். மிகச் சிறந்து விளங்குவது பூ:, புவ:, ஸுவ: என்ற மூன்றே யாகலின் இவையன்றே மூன்று வ்யாஹ்ருதிகள் எனப்பட்டது. அவற்றுளன்றே என்பது வ்யாஹ்ருதிகளெனும் பகுப்பிலேயே என்ற பொருளை யுணர்த்துகிறது. மஹ: என்ற நான்காவது வ்யாஹ்ருதியை மஹா சமஸரின் புத்திரராகிய மாஹா சமஸ்யரென்ற ரிஷி அறிந்து வெளி யிட்டார். ரிஷியின் பெயர் குறிக்கப் பெற்றிருப்பதால், உபாசனையின் பகுதியாக ரிஷி வணக்கத்தையும் கொள்ளவேண்டு மென்பதை வலியுறுத் துவதாகும். மஹ: என்ற சொல் மிகப் பெரிதென்றும், வழிபடுதற் குரிய தென்றும் பொருள்படும். இதனைக் கண்டறிந்த ரிஷியின் பெயரும் இப் பொருள்படவே அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. சமஸ மென்பது வேள்விகளில் ஸோமச்சாற்றைப் பருகுவதற்கான பாண்டமாகும். பல் வகை வேள்விகளிலும் பயன்படுத்தப்பட்டு சிறந்து விளங்குவதால் அப் பாண்டம் மஹா சமஸமெனப்படுகிறது. அத்தகைய சிறப்பும் பிறருக்குப் பயனளிக்கும் பாந்த பண்புகளையுமுடைய மஹா சமஸ ரென்பா ரின் புதல்வரால் அறியப்பெற்றதே மஹ: என்ற நான்காவது வ்யாஹ்ருதி. அது பிரம்மம்—பரம்பொருளே; பிரம்ம மென்ற சொல்லும் எல்லையின்றிப் பெரிதாக விளங்குவது என்றே பொருள்படுகிறது. இங்கு பிரம்மமென்றது உபாஸனை செய்தற்குரிய ஒலிவடிவாகிய ஓங்காரத்தையே குறிக்கும். அது ஆன்மா என்றதால் மஹ: என்ற அந்த நான்காவது வ்யாஹ்ருதி ஆன்மாவு மாகும். அதாவது, மஹ: எனும் நான்காவது வ்யாஹ்ருதியை ஓங்கார மாகிய சப்தப் பிரம்மமென்றும் ஆன்மாவென்றுங் கருதி உபாசனை செய்ய வேண்டும்.

'ஆன்மா' என்ற சொல் எல்லாவற்றையும் 'அடைந்திருப்பது' 'எங்கு மளாவிய தன்மையது' என்ற பொருள்படுமாகலின் பரம்பொருளையே குறிக்குமாயினும், வெகுவாக உறுப்புகளினும் வேறாக, உணர்ச்சியைக் கொடுக்கும் உயிர்நிலையைக் குறிப்பதாகவே வழங்கப்படுகிறது; ஆகலின்,

வ்யாஹ்ருதியுபாஸனையில், மஹ : என்றதை உடலின் உயர்நிலையாம் ஆன்மாவெனவும், பூ: புவ: ஸுவ: என்ற மூன்று வ்யாஹ்ருதிகளை உடலின் உறுப்புகளாகவுங் கருதவேண்டும். அன்றி, அனுவாக ஈற்றிற் கூறியுள்ள பயனைப்பெற விரும்புவோர் தனது ஆன்மாவை, பரம்பொருள் வடிவு (விராட் பிரம்மம்) எனும் மஹ: என்றும், உறுப்புகளை விராட் புருஷனின் உறுப்புகளே போன்ற அக்னி முதலிய தேவதைகளெனும் மூன்று வ்யாஹ்ருதிகளென்றுங்கொண்டு உபாஸனை புரியவேண்டும். இதனையே (அதன்) உறுப்புகள் மற்ற தேவதைகள் என்பது குறிக்கிறது.

தொகுப்பின் (ஸம்ஹிதையின்) நால்வகையுறுப்புகளைக் கொண்டு எழுத்திக்களில் உலகம், ஒளி முதலிய ஐம்பெருந்தொகுப்பு உபாஸனை கூறியது போன்று, இங்கு முறையே உலகம், தேவதை, வேதம் பிராணன் என்ற நான்கு வகைகளின் முப்பிரிவுகளை மூன்று வ்யாஹ்ருதிகளிற் கற்பித்து, இந்நால்வகையின் சிறப்புக்குக் காரணமாகிய ஆதவன், சந்திரன், பிரம்மமெனும் ஓங்காரம், உணவு என்பனவற்றை நான்காவதாகிய மஹ : என்ற வ்யாஹ்ருதியில் கற்பித்து நண்ணிய உபாஸனை விளக்கப்பெறுகிறது.

## வ்யாஹ்ருதிகளை உலகுகளாக உபாஸித்தல்.

மூன்று வ்யாஹ்ருதிகளும் முறையே புவி, இடைவெளி (அந்தரிக்ஷம்), திவியென்ற மூவுலகங்களாகக் கருதி உபாஸனையுரைக்கப்படுகிறது. பூ: புவ: ஸுவ: என்ற சொற்களும் புவி, இடைவெளி, திவி என்றே பொருள் படுகின்றன. இவ்வுலக மென்றது புவி, அவ்வுலகமென்றது திவி; புவி, திவி, இடைவெளிகளை ஆதவன் (ஆதித்யன்—சூரியன்) ஒளிரச் செய்வதால் அவனையே மஹ: என்ற வ்யாஹ்ருதியில் உபாஸனை கற்பிக்கப் பெற்றது.

## தேவ வொளிகளாக உபாஸித்தல்:

மூன்று வ்யாஹ்ருதிகளும் முறையே அக்னி, வாயு, ஆதவன் (ஆதித்யன்) என்ற தேவதைகளென உபாஸிக்கவேண்டும். இந்த தேவதைகளின் பெயர்கள் உணர்த்தும் பொருள்களாகிய அழல், காற்று, சூரியன் என்ற மூன்றும் புவி, இடைவெளி, திவியென்ற இடங்களையே அடுத்துள. அன்றி, அக்னி பூலோகதேவதை யென்றும், வாயு அந்தரிக்ஷலோக தேவதை யென்றும், ஆதித்யன் த்யுலோக தேவதை யென்றுமே தேவதைப் பகுப்பில் கூறப்பெற்றுள்ளன. அழல், காற்று, ஆதவன் என்பாரின் ஒளிகளினும் மகிழ்ச்சி மிகவையளிப்பது சந்திரனது ஒளியே யாகவின்,பேரின்ப மகிழ்ச்சிக்கு மஹ: என்ற நான்காவது வ்யாஹ்ருதியில் பொருத்தங் கூறப் பெற்றது.

## வேதங்களாக உபாஸித்தல்:

மூன்று வ்யாஹ்ருதிகளும் முறையே ரிக், ஸாமம், யஜுஸ் என்ற மூவகை வேதப்பிரிவுகளென உபாஸனை செய்யவேண்டும். ரிக் என்ற சொல், 'அறிவு,' 'கற்கை' என்று பொருள்படும்; அது உணர்வின் முதற்படி யாகலின் முதல் வ்யாஹ்ருதியாகிய பூ: (புவி) என்றதுடன் பொருத்தங்

கூறப்பெற்றது. ஸாமமெனின் இசையென்றே, சீர்பெற்ற இணைப் பென்றே பொருள்படுமாகலின், புவ: (இடைவெளி) என்றதுடன் பொருத்தங் கூறப்பெற்றது. யஜுஸ் எனின் 'வழிபடுதல்' என்று பொருள்படுதலால் வழிபடப்பெறும் தேவர்களின் இருப்பிடமாம் திவி யெனும் ஸுவ: என்ற வ்யாஹ்ருதியுடன் பொருத்தங் கூறப்பெற்றது. இம்மறைகளெல்லாம் பிரம்மமெனும் ஓங்காரத்தினின்றே வெளிப்பட்டன வெனக்கூறப்படுவதால் மஹ: என்ற நான்காவது வ்யாஹ்ருதியுடன் பிரம்மம் (ஓங்காரம்) பொருத்தப்பெற்றது.

## உயிர்வன்மைகளென உபாஸித்தல்:

மூன்று வ்யாஹ்ருதிகளும் முறையே பிராணன், அபானன், வ்யானன் என்ற மூவகை உயிர்வன்மைகளாக உபாஸனை செய்யவேண்டும். பிராணன் உட்செல்லும் காற்று அல்லது மூச்சைக் குறிக்கிறது; அபானன் உள்ளிருந்து வெளிப்படும் காற்று அல்லது மூச்சு வன்மையைக் குறிக்கிறது. வ்யானன் உள்ளெங்கும் பாவி நிற்கும் காற்று அல்லது மூச்சு வன்மையைக் குறிக்கிறது. இவை உணவின் ஆதாரவைக் கொண்டே தொழில் வன்மை பெறுவதால் இவற்றின் சிறப்புக்குக்காரணம் உணவென்றும், மஹ: என்ற வ்யாஹ்ருதியுடன் உணவின் பொருத்தமும் கூறப்பெற்றது.

## உபாஸனைப் பயன்:

இவ்வாறு நான்கு வ்யாஹ்ருதிகள் ஒவ்வொன்றையும் நால்வகைப் பொருள்களைக்கொண்டு உபாஸனை கற்பிக்கப்பெற்றது. ஆகலின் வ்யாஹ்ருதிகள் நாநான்கு (பதினாறு) பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றன. இப் பதினாறு வகைகளில், பதினாறு கலைகளைக் கொண்டவனாக உள்ளுறை பரம்பொருளை (புருஷனை) உபாஸிக்க வேண்டுமென்பதை வலியுறுத்த இந்நான்குமன்றே நால்வகையாகி என்றும், நாநான்கு வ்யாஹ்ருதிகள் (ஆகின்றன) என்றும் ஒரே பொருள்பட இருமுறை கூறப்பெற்றது.

இவ்வாறு, பூ: என்றதை பூலோகம், அக்னி, ரிக்குகள், பிராணன் என்றும், புவ: என்றதை அந்திரிக்ஷம் (இடைவெளி), வாயு, ஸாமங்கள், அபானன் என்றும், ஸுவ: என்றதை ஸுவர்லோகம் (திவி), ஆதித்யன் (ஆதவன்), யஜுஸ்ஸுக்கள், வ்யானன் என்றும், மஹ: என்றதை ஸூரியன், சந்திரன், பிரம்மம் (ஓங்காரம்), உணவென்றுங் கொண்டு அகத்தும் புறத்துமாக உபாஸனை கூறப்பெற்றதாகிறது. உபாசனை யென்றது விரும்புவதை நிறைவேற்றக்கூடிய ஒருபிரைக் குறித்ததென்பதே பொருந்துமெனக் கூறியுள்ளோமாகலின், மேற் கூறப்பெற்றது பரம்பொருளை வ்யாஹ்ருதிகளின் வாயிலாக அவ்வடிவங்களிற் கருதிச் செய்யப்பெறும் உபாசனையே. ஆதலாற்றான் இவ்வழி யுணர்ந்து உபாசனை செய்வோன் பிரமத்தையறிகின்றான் எனப்பட்டது. இங்கும் பிரம்மமென்றது விராட் புருஷனைக் குறிக்கும் ஓங்காரமேயாகும். அங்கிலையில் பிரம்மத்தின் சக்திகளேபோன்ற தேவதைகளெலாம், பிரம்மத்தில் இணையுற்ற உபாஸகனுக்கு அரசிறை செலுத்துவதே போன்று வணங்குவோராகி அவனது விருப்பங்களை எளிதிலே நிறைவேற்றுவோராகின்றனர். இதனையே எல்லாத் தேவர்களும் அவனுக்குக் கப்பங் கொணர்கின்றனர் என்பது புலனாக்குகிறது. பயனைக் கோராது இவ்வகை யுபாசனை செய்வதால் பரம்பொரு ளுணர்ச்சியை எளிதிற் பெறுவதற்கான தூய மனோநிலையை விரைவிலே அடைவான்.] (5).

# மனித விலங்காகவே வாழ்கின்றனரே!

இடம்பம், இறுமாப்பு, மதிப்பு (கர்வம்), சினம், கொடுஞ்சொல் (முரட்டுத்தனம்), அனைத்தையும் ஆளும் கடவுள் உண்டென்று அறியாமை—இவைகளே அசுரத்தன்மையடைந்தவன் வளமை.

அசுரமாக்கள், செய்தற்குரியது, விடுதற்குரியது இன்னதென்றறியார்; தூய்மையும், ஒழுக்கமும் வாய்மையும் காணார்.

உலகம் தெய்வ சக்தியை ஆதாரமாகக்கொண்டு நிலைத்திருக்கவில்லை; அது தெய்வப் படைப்பென்பது பொய்; அது கடவுளற்றது. ஆண் பெண் சேர்க்கையாலேயே பிரபஞ்சம் உண்டானது; அது காமபோகங்களைக் காரணமாயுடையது, இதைத் தவிர வேறென்ன? என்கின்றனர்.

இந்தப் பொய் நோக்கத்தில் நிலைபெற்றுப் புன்மதிகொண்ட கெடுவியல்பாளர், சிறு மதியர், உலகத்திற்கே கேடு சூழ்ந்து, அதன் அழிவிற்காகக் கொடுந்தொழில் புரிகுவர்.

இடம்பமும், செருக்கும், மதமும் பிடித்து, அடங்காக் காமவாய்ப்பட்டு மடமையாலே பொய்மதங்கொண்டு, இழுக்கான நடையுடன் செயல் புரிகின்றனர்.

ஆசை யகந்தையால் வாழ்வைப் பாழாக்கும் அவர்கள், இறக்குமட்டும் எண்ணற்ற பொய் நினைப்புகள் பூண்டு, பாழும் காமபோகங்களில் உழன்று, "இதுவே இன்பம்" என்று நிச்சயித்து நூற்றுக்கணக்கான ஆசாபாசங்களிற் கட்டுண்டு, காமக் குரோதங்களில் மூழ்கி, தங்கள் விஷய போகங்களுக்காகவே அநியாயஞ் செய்து பொருள் குவிக்க விழைகின்றனர்.

இந்த லாபம் இன்று பெற்றேன்! இந்த மனோரதமும் இனிக் கைகூடுவேன்! என்னிடம் இந்தச் செல்வமுள்ளது. மேலும் நாளை இன்னது எய்துவேன்.

அந்தப் பகைவன் என்னால் மாய்ந்தான்! இனி மற்றவர்களையும் கொன்றுவிடுவேன். நானே ராஜா! நானே போகி! நானே சித்தன்! நானே பலவான். நானே சுகி;

நான் பெரிய பணக்காரன், ஜனக்கட்டுள்ளவன்; எனக்குச் சமானம் வேறு யார்?

வேட்பேன், ஈவேன், களிப்பேன் என்று நகாரமடிக்கும் மடமையில் மயங்கினோர்; பலவகையாகச் சித்தஞ் சுழன்று மருண்டோர், போக வலையிற் சிக்கி, விஷயபோகங்களிற் பயிற்றுண்டோர். பாழும் அகந்தைத் தீமைகளான அசுத்த நரகில் வீழ்கின்றனர்.

இவர்கள் தற்புகழ்ச்சியாளர், மூடர், செல்வச் செருக்குடன் மதம் பிடித்தவர்; பேருக்காகவும், இடம்பத்திற்காகவும், முறை தவறி நடப்பவர்.

அகங்காரம், பலம், கர்வம், காமம் குரோதம் பிடித்து, பிறரைத் தூற்றி, பிறர் உடல்களிலும் விளங்கும் பரமாத்மாவை பகைக்கின்றனர். பிறரை வெறுப்பது இறைவனை வெறுப்பதாகும்.

இப்படி பெறுக்குங் கொடியவர்கள், அமங்கலர்கள், கசடர்கள், மக்கட் பதர்கள், **மனித விலங்காகவே வாழ்கின்றனர்.**

பொறாமைக்காரன் மனமே நரகம்; சினம் நரகத்தீ; தீய காமம் நரக வேதனை.

மனிதன் ஆத்மநலத்தைப் போற்றி உயர்ந்த நிலையையடைய, செய்யத் தக்கது, தகாததைத் தேர்வதில் சாத்திரமே பிரமாணம் என்பதை அறிந்து, சாத்திரம் விதிக்கும் செயல்களைச் செய்வதுதான் நேர்மையான மார்க்கம்.

# கரம்—மஸாலா

கோவர்த்தனம்

வினு:—ஆசிரியர் வாக்கு உங்கள் ஆதாரக் கல்விக்கு ஆதாரம் யாதென்பது அறியலாகுமோ?

விடை:—பேஷாக! கல்விக்குத் தொழில் ஆதாரம். தொழிலுக்கு நீர்தான் ஆதாரம்.

வினு:—உலகத்தில் எத்தனையோ பத்திரிகைகள் வெளிவருகின்றன. தற்சமயம் கல்வியை கவனிப்பார்களாவென்பது எனக்குச் சந்தேகம்.

—சந்தேகப் பிராணி

விடை:—சந்தேகந்தானே, கவலையில்லை. கசக்கும் காப்பியையும் காசுபோட்டு வாங்குவது அன்பர் அறியார் போலும்.

வினு:—ஏன் உங்கள் பத்திரிகையில் மற்றும் சில பகுதிகளைச் சேர்க்கக்கூடாது.

விடை:—இன்னும் குழந்தைத்தானே. அவசரப்பட்டால் அஜீரணமாகிவிடும் என்ற பயம் தான் சுவாமி.

வினு:—மாதர் முன்னேற்றத்தை நீர் மறுக்கிறீரா அல்லது வெறுக்கிறீரா?

விடை:—மாதர் முன்னேற்றத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனல் அபலைகளுக்கு அன்ன நடைதானே!

வினு:—ஏன் உங்கள் பத்திரிகையில் காதல் கதைகள் எழுதலாகாது.

விடை:—காதல் கதையில் இறங்கினல் கல்வி கசக்குமே சுவாமி.

வினு:—ஆசிரியர்கள் உள்ளம் என்ற தலைப்பில் ஆசிரியர்கள் தங்கள் கஷ்டங்களை எல்லாம் சொல்லுகிறார்களே, ஏன் ஆசிரியர்களின் இன்னல்கள் என்று பெயர் சூட்டலாகாது?

விடை:—மன்னிக்கணும். இன்னல்களைக் கேட்டால் எழுந்தோடுவீர்களோ என்ற பயம்தான்.

வினு:—ஆரம்பக் கல்விக்கும், ஆதாரக் கல்விக்குமுள்ள வித்தியாசம் என்ன?

விடை:—வித்தியாசம் ஓரளவுதான். ஒன்று அறிவைத் தீட்டுகிறது. மற்றொன்று அன்னம் அளிக்கிறது.

வினு:—எடிட்டர்வாள்! தாம் பள்ளிகளை ஸ்தாபிப்பதில் பெயர் பெற்றவரென்று தகவல் தெரிகிறது. நானும் ஒரு பள்ளியைத் திறக்க வேண்டுமென்று அவா கொண்டுள்ளேன்.

விடை:—தாராளமாகத் திறக்கலாம். ஆனல் முதல் உங்களுக்குச் சொந்த வீடு இருந்தால் எழுதிவையும்.

வினு:—வாசித்த வனைவிட வண்ணான் கெட்டிக்காரனென்று சொல்லுகிறார்களே நீங்கள் ஒத்துக்கொள்ளுகிறீரா?

விடை:—படிக்காத வண்ணான் அரைவயிர் கஞ்சி கவலையில்லாமல் சாப்பிடுகிறான். நாம் கவலையில் வயிற்றைக் காயப்போடுகிறோம். நீரே சொல்லும் எது தேவலை யில்லை என்று.

# அடா! அஷ்டவக்ரமே!!

## வித்வான் A. வேங்கடலக்ஷ்மம்மா

சுப்பு:—என்டா கோபு! விளையாட வரமாட்டாயா?

கோபு:—போடா! போ, விளையாட்டைத் தவிர நீ என்ன கண்டாய்? பரிக்ஷை பார்த்தால் பத்து நாள் இல்லை. விளையாட்டாம்.

சோமு:—பத்து நாள் இருப்பதற்கு இப்போது என்னடா, வா ஒருமணிநேரம் விளையாடுவோம்.

கோபு:—எட்டாம் வகுப்பு மாணவனுக்கு விளையாட்டாம்விநோதமாம் ஹூம், அந்தக் காலமெல்லாம் மலை ஏறிப்போச்சு, வருஷமுழுதும் படித்தும்படித்து மண்டை உடைத்துக் கொண்டால்கூடபரிக்ஷையில்மார்க்கு அரோகராதான். இந்த எட்டாம் வகுப்பு பிள்ளைகள் அந்த அதிருஷ்டத்தை கொடுத்துவைக்கவில்லை.

சோமு:—என்டா! ஒரு மணி நேரம் விளையாடினுல் என்னவாம். என்னமோ குடி முழுகி போகிறது போல் அல்லவா பேசுகிறுய்! ஹூம் இந்த பரிக்ஷைகள் நம் அறிவைப் பரிக்ஷிப்பதைவிட பொறுமையைப் பரிக்ஷிப்பதற்கல்லவா ஏற்பட்டிருக்கின்றன. எப்பொழுது பார்த்தாலும் புஸ்தகப் புழுப்போல் இருக்கின்றுயே? கொஞ்சமாவது மனதிற்கு நிம்மதி வேண்டாமா?

கோபு—என்ன நிம்மதியோ] உண்ணும்போதும் உறங்கும்போதுங் கூட இதே கவலைதான். எத்தனைப் புத்தகம், எத்தனை நோட்ஸ், எத்தனை மாதிரித் தாள்கள்? போதாததற்கு ஸ்பெஷல்வகுப்புகள்! ஒன்ருன்ரு? ஹூம், கடைசியில்எல்லாம்படித்துக் கண்ட பலன் என்னடாவென்றுல், தேர்ச்சிப் பெற்றவரின் ஜாபிதாவில் நம்பர் இல்லாதிருப்பதுதான்.

சோமு—அது என்னமோப்பா! நீ இப்படி அவஸ்தைப் படுகிறுய்! நம்ம அடுத்தாத்து அப்புவைப் பார்? கவலையில்லா ஜீவன். நாளை பரிக்ஷை இருந்தபோதிலும் ஹூம் இன்றைக்குக்கூட சினிமாக் கொட்டகையில் காணலாம். என்டா அப்பு! நாளைக்கு "பரிக்ஷையாச்சே" என்றுல் "பார்த்துக்கொள்வோம் பத்தாம் வகுப்பில்; அதுவரையில் எங்களுக்குக் கவலை யில்லையப்பா. உபாத்தியாரைக் காக்காப்பிடிக்க நமக்குத் தெரியாதா?" என்பான். நீ என்னடா வென்றுல் குட்டிக்காணம் போடுகின்றுய்.

---

வினு:—சுதந்திர இந்தியாவிற்கும் குடியரசு இந்தியாவிற்கும் என்ன வித்யாசம் கண்டீர்?

விடை:—அடுத்த ஊருக்கு போன அவர்கள் ஆபத்து இல்லாமல் திரும்புவார்களா என்னும் சந்தேகத்தைத்தான் கண்டோம்.

வினு:—என் சார்! வகுப்பு வாதம் கூடாதென்று மேடையேறிப்பேசுபவர்களெல்லாம்உள்ளுக்குள்ளே வகுப்புவாதத்தை கிளப்புகிறுர்களே! இதற்கு என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்?

விடை:—நாடகமே உலகம் என்று பாட ஆரம்பியுங்கள்.

சுப்பு:—அடே சோமு! அதோ அடுத்தாத்து கிட்டு வருகிறான்.

சோமு:—வாங்கோ, வாங்கோ, இப்பதான் நம் அஷ்டவக்ர மகா ராஜாவைக் காணுமேயென்று நினைத்தேன். அதற்குள் வந்துவிட்டாய். அப்பா நீதாண்டா உண்மையான சிநேகிதன்.

சுப்பு:—அதென்னடா அது! அஷ்டவக்ரம்! புதுப் புதுப் பெயர்களைச் சொல்லுகிறாயே! பேஷ் யார் வீட்டிலாவது நாமகரணம் நடக்கும் பொழுது உன்னைத்தான் அழைக்கணும்.

சோமு:—பெயரிலே என்னடா இருக்கு, எப்போப் பார்த்தாலும் உனக்கு கேலியாகத்தானிருக்கும். கதை கேட்டபிறகு அப்படிச் சொல்லமாட்டாய்.

கோபு:—அப்படியா! ஏதோ, அந்த கதைச் சொல் பார்ப்போம்.

சோமு:—ஒரு ஊரில் ஏகபாதர் என்ற ஒரு முனிவர் இருந்தார்.

சுப்பு:—என்னடா, சோமு, என்னமோ ஸமஸ்கிருதம் பொழிந்து தள்ளுகிறாயே.

சோமு:—இவரை, என்ன நினைத்தீர். வாய் திறந்தால் ஸமஸ்கிருத மழை பொழியும்.

கோபு:—மழையுடன் நின்றாயே, இடியைக் கொண்டுவராதே. சரி தான் இரண்டு வாக்கியங்களில் சொல்லி முடித்துவிடு பார்ப்போம்.

சோமு:—சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் நமக்கு ரொம்ப தூரம். ஆனாலும் பார்க்கலாம். நாலைந்து வார்த்தைகளில் முடிக்கிறேன். அந்த ஏகபாதர் இரவும்பகலும் சீடர்களுக்கு வேதம்சொல்லி கொடுத்து இருந்தாராம். ஒருநாள் பூர்ண கர்ப்பவதியான அவருடைய மனைவி வேதத்யானத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார். சீடர்களும் வேதத்தை உருபோட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த அம்மையார் உதரத்திலிருக்கும் குழந்தை உரத்த குரலில் "தந்தையே" தாங்கள் இரவும் பகலும் பயிற்றுவிப்பதினால், சீடர்கள் தூக்கமின்றி வேதத்தைத் தப்பாக உச்சரிக்கிறார்கள். இது தவறான முறையாகும் என்று சொன்னதாம் அக்குழந்தை.

சுப்பு:—காலத்திற் கேற்ற குழந்தைதாண்டா; உதரத்திலிருக்கும் போதே அப்பாவை அதிகாரம் பண்ண ஆரம்பித்துவிட்டது. பலே! பலே, அப்புறம்.

சோமு:—அதைக்கேட்ட ஏகபாத முனிவர் சிசுவின்மேல் கோபங்கொண்டு 'சிறுவனே. குழந்தைப்பருவத்திலிருக்கும் நீயா என்னை குறை கூறுகிறாய்? வேதாத்யனத்தில் வக்ர புத்தியைக் காண்பித்ததினால் நீ அஷ்ட வக்ரங்களுடன் பிறப்பாயாக' என்று சபித்தார். பாவம் அச்சிறு குழந்தை தந்தையின் சாபத்தின் படி அஷ்ட வக்ரங்களுடன் பிறந்து அஷ்டாவக்ரன் என்று அழைக்கப் பட்டான்.

சுப்பு:—அடா. பாவமே உள்ளதைச் சொன்னால் உடலெரியும் போல் அல்லவா இருக்கிறது. அப்புறம்

சோமு:—அஷ்டா வக்ரன் குழந்தையாக இருக்கும்பொழுது ஏகபாதர் ஜனக மகாராஜா செய்யும்

யாகத்திற்குச் சென்றார். ஆனால் அங்கு வந்த பண்டிதரொருவரால் வாதத்தில் தோற்கடிக்கப் பட்டு, வெட்கி ஊர் திரும்பாமல் அங்கேயே தங்கிவிட்டார்.

குழந்தை அஷ்டாவக்ரனும் சுவேதகேதுவும், உத்தாலக முனிவரிடம் கல்வி பயின்று வந்தனர். குழந்தைப் பருவத்திலிருந்தே ஒன்றாக இருந்ததினால் அஷ்டாவக்ரன் உத்தாலகரைத் தந்தையாகவும், சுவேதகேதுவைத் தமையனாகவும் கருதினான். ஆனால் ஒருநாள் உத்தாலகன் துடையில் சுவேதகேது உட்கார்ந்ததைக் கண்ட அஷ்டாவக்ரன் தானும் குருவின் துடையில் ஏறினான். சுவேதகேது இதைப் பொறுக்காமல் அவன் கையைப் பிடித்து இழுத்து "ஏண்டா" உன் தந்தையின் மடியில் போய் உட்கார் என்றான். அஷ்டாவக்ரனுக்கு அப்பொழுதுதான் உண்மை விளங்கிற்று. தாயின் அனுமதிபெற்று சுவேதகேது பின்வர தந்தையைக் காண மிதிலா நகரத்திற்குச் சென்றான். அரண்மனைக் காவலாளர்கள் அக் குழந்தைகளை உள்ளே அனுப்ப மறுத்தனர். ஆனால் அஷ்டாவக்ரன் நாங்கள் சிறுவர்களாயிருந்தாலென்ன? வேத சாஸ்திர, புராணங்களைப் படித்திருக்கிறோம் கர்வித்திருக்கும் உங்கள் அரண்மனை வித்வான்களுடன் வாதம் செய்யவும் தயாராயிருக்கிறோம். சென்று உன் அரசனுக்குத் தெரிவி என்று வீரம் ததும்ப மொழிந்தான். ஜனக மகாராஜா அவர்களை வரவேற்றார். குருபியான அஷ்டாவக்ரனை அவர் எறெடுத்துப் பார்த்தார். குழந்தைகள் முகத்தின் ப்ரம்ம தேஜஸைக் கண்டு வியந்தார். மன்னரின் முன்னில் வாதம் நடைபெற்றது. வீர சிங்கம்போல் வாதத்தில் வென்று தந்தையை மகிழ்வித்தான்.

கோபாலன்:—பாக்கி கதை எனக்குத் தெரிந்துவிட்டது. புத்திசாலியான பிள்ளையைக் குரூபியாக சபித்தோமே என்று ஏகபாத முனிவர் வருந்தினர்.

சோமு:—அடே! சொல்லிவிட்டாயே. எப்படி தெரிந்துக் கொண்டாய்?

சுப்பு:—ஹும் இதென்னடா பிரமாதம். உபாத்தியாயர் கேட்கும் கேள்விக்குத் தவிர மற்றெல்லாம் கண்டு பிடிப்பேன்.

கோபு:—ஏண்டா சோமு! இது தானா நாலைந்து வார்த்தைகள்? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கின்றதா?

சோமு:—அவ்வளவுதான் உனக்குத் தெரிந்தது. படா, படா கைகளெல்லாம் இரண்டொரு வார்த்தைச் சொல்லுகிறேனென்று காரியதரிசி விழிக்க, சபையோர்கள் முழிக்க, அக்ராசனபதி அல்லலுற, இந்த மகாராஜா உள்ளே செல்ல மாட்டாரா என, நம்மைப்போன்றவர் பிரார்த்திக்க இரண்டு மணி நேரமாகியும் பிரசங்கத்தை முடிக்கத் தெரியாது கடைசியில் "என்னமோ பெரியவாள் மன்னிக்கணும் இன்னொருமுறை அவகாசம் கொடுத்தால் அன்பர்களிடத்தில் சாவகாசமாய் அடியேன் பேசுகிறேன். இத்துடன் அரைகுறையுடன் என் சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்" என்பார். அதை விடவா இது?

கோபு:—ஆஹா! உன்வாய்க்குக் கற்கண்டுதான் போடணும்.

# எலிமெண்டரி பள்ளிகளுக்கு உரிய
# எமது புத்தகங்கள்

| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| **தமிழ்ப் பாடம்** | | | | | |
| | த. சே. உமாபதி, M. A., L. T., எழுதிய:— | | | | |
| 1. | உமா வாசகம் | முதல் வகுப்புக்கு | 0 | 4 | 0 |
| 2. | do | 2—ம் ,, | 0 | 5 | 0 |
| 3. | do | 3—ம் ,, | 0 | 6 | 0 |
| 4. | do | 4—ம் ,, | 0 | 8 | 0 |
| 5. | do | 5—ம் ,, | 0 | 9 | 0 |
| 6. | do | 6—ம் ,, | 0 | 12 | 0 |
| 7. | do | 7—ம் ,, | 0 | 14 | 0 |
| **தமிழ் இலக்கணம்** | | | | | |
| | வித்துவான் த. வைத்தியலிங்கம் எழுதிய:— | | | | |
| 8. | எளிய தமிழ் இலக்கணம் | 4—வது, 5—வது வகுப்புகளுக்கு | 0 | 6 | 0 |
| **தமிழ் உப பாடம்** | | | | | |
| | மணி. திருநாவுக்கரசு முதலியார் எழுதிய:— | | | | |
| 9. | திருக்கண்ணப்பன் | 5—வது, 6—வது வகுப்புகளுக்கு | 0 | 6 | 0 |
| 10. | குமணன் | 4—வது, 5—வது ,, | 0 | 5 | 0 |
| **சரித்திரம்** | | | | | |
| | T. S. ராஜகோபாலன், B. A., L. T., எழுதிய:— | | | | |
| 11. | நமது நாட்டுச் சரித்திரக் கதைகள் | 3—ம் வகுப்புக்கு | 0 | 5 | 0 |
| | த. சே. உமாபதி, M. A., L. T., எழுதிய:— | | | | |
| 12. | நமது நாட்டுச் சரித்திரக் கதைகள் | 4—ம் வகுப்புக்கு | 0 | 6 | 0 |
| 13. | ,, ,, | 5—ம் ,, | 0 | 8 | 0 |
| 14. | நமது நாட்டுச் சரித்திரம் | 6—ம் ,, | 0 | 10 | 0 |
| 15. | ,, ,, | 7—ம் ,, | 0 | 12 | 0 |
| 16. | ,, ,, | 8—ம் ,, | 0 | 14 | 0 |
| **பூகோள சாஸ்திரம்** | | | | | |
| | T. S. ராஜகோபாலன், B. A., L. T., எழுதிய:— | | | | |
| 17. | பூகோள சாஸ்திரம் | 3—ம் வகுப்புக்கு | 0 | 8 | 0 |
| | த. சே. உமாபதி, M. A., L. T., எழுதிய:— | | | | |
| 18. | பூகோள சாஸ்திரம் | 4—ம் வகுப்புக்கு | 0 | 10 | 0 |
| 19. | ,, ,, | 5—ம் ,, | 0 | 15 | 0 |
| **நகராட்சி சாஸ்திரம்** | | | | | |
| | T. S. ராஜகோபாலன், B. A., L. T., எழுதிய:— | | | | |
| 20. | நகராட்சியும் சுகாதாரமும் | 3—ம் வகுப்புக்கு | 0 | 5 | 0 |
| | த. சே. உமாபதி, M. A., L. T., எழுதிய:— | | | | |
| 21. | நகராட்சியும் சுகாதாரமும் | 4—ம் வகுப்புக்கு | 0 | 6 | 0 |
| 22. | ,, ,, | 5—ம் வகுப்புக்கு | 0 | 8 | 0 |

**உமா தேவன் கம்பெனி,**

16, செம்புதாஸ் தெரு, சென்னை-1. தபால் பெட்டி: 1584

# பி. ஜி. பால் அண்ட் கம்பெனி,

பிராஞ்சிஸ் ஜோஸப் தெரு, சென்னை-1.

## ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்

## நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், B.A.L.T.

| | | அ. | பை |
|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) ... | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) ... | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) ... | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) ... | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) ... | 7 | 6 |

எமது புதிய கணக்குப் புத்தகங்கள்

## கிண்டர் கார்டன் தினசரிக் கணக்கு

ஆசிரியர் S. ஜகந்நாதன்

கிண்டர் கார்டன் உதவி ஆசிரியர் டீச்சர்ஸ் காலேஜ்,

சைதாப்பேட்டை, சென்னை

J. ராமச்சந்திரன், B. A. (HONS) M.Ed.

திருத்தியமைத்தது

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) ... | 5 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) ... | 6 | 0 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) ... | 10 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) ... | 13 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) ... | 13 | 0 |


Edited and Published by Sri A. K. S. Sarma, 87, Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint St. Madras—1